# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. III Issue 12 March 2014

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 10 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 11 |
| யோக வாழ்க்கை விளக்கம் . . . . . | 13 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 15 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 17 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 21 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 22 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 24 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . | 26 |
| சொல்லி சாதிப்பதும், சொல்லாமல் சாதிப்பதும் . . . . . | 43 |
| அன்னை ஸ்ரீ அரவிந்தரின் புரட்சிகரமான சிந்தனைகள் . . . | 45 |

ஜீவியத்தின் ஓசை

ஆத்மாவை

உடல் நாடும்

ஆர்வம்

நிறைவு



கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVI. The Ascending Series of Substance

Page 260
Para 13

These are terms of ancient psycho-physical science,

Behind all these lies the one great fact and law,
These are temporary poise,
They are poises of form, consciousness, power in the material evolution.
There is a greater truer existence.
Of that this is only an external result.
It is a physically sensible aspect.
Our substance does not end with our physical body,
It is only the earthly pedestal,
It is a terrestrial base, the material starting point.
Behind our waking mentality – there are vaster ranges.
They are regions of subconscient and Superconscient.
Sometimes we become aware of them abnormally.
So, there are behind our gross physical being other grades.
They are of subtle grades of substance.
They have a finer law.



## 26. உயரும் பொருளின் அடுக்குகள்

இவை முன்னோர் கண்ட உடலும், ஆன்மாவும் இணையும் சாத்திரம்,
இவற்றின் பின்னால் ஒரு பெரிய சட்டமான சத்தியம் உண்டு,
இவை அனைத்தும் தற்காலிகமான நிலைகள்,
இந்த ஜடத்தின் பரிணாமத்தினுடைய பவர், ஜீவியம், ரூப நிலைகள் இவை.
ஒரு உண்மையான பெரிய வாழ்வுண்டு.
இது அதன் புற வெளிப்பாடான பலனாகும்.
நம் உடலின் புலனறியும் அம்சங்கள் இவை.
நம் உடலுடன் பொருள் முடியவில்லை,
அது மண்மீது அமையும் பீடம்,
பூமிக்குரிய அடிப்படை, ஜடம் ஆரம்பிக்கும் இடம்.
விழிப்பான மனத்தின்பின் பரந்த லோகங்களுண்டு.
அவை பாதாளம் பரமாத்மா எனப்படும்.
வழக்கத்திற்கு மாறாக சில சமயம் நாம் அவற்றை அறிகிறோம்.
அது போல் நம் உடலின் பின்னால் சூட்சும நிலைகள் உண்டு.
அவை சூட்சுமப் பொருளாலானவை.
அவற்றின் சட்டம் நுட்பமானது.

There is a greater power.
It supports a denser body.
We can enter into the ranges of consciousness.
They belong to them.
They impose the law and power on our dense matter.
They would substitute their purer higher intenser conditions of being.
It is for the grossness and limitation of our life.
It is a physical life, impulse, habits.
If that be so,
Then the evolution of nobler physical existence ceases to be dreams,
It won't be limited by the animal birth,
It is of animal life and death,
It is of difficult alimentation,
It is of facility of disorder and disease,
It is subject to poor unsatisfied vital cravings,
It will cease to have the appearance of a dream and chimera.
It becomes a possibility founded on a truth.
It will be a philosophic rational truth.
It will be in accordance with all the rest.
That we have known and experienced.
We have been able to think about the overt and secret truth of our existence.



பெரும் பவருண்டு.
அது கனத்த உடலை ஆதரிக்கிறது.
ஜீவியத்தின் வீச்சினுள் நாம் நுழையலாம்.
இவை அவற்றிற்குடையவை.
அதன் சட்டமும், பவரும் கனத்த உடலுக்கு உட்படும்.
உயர்ந்த தூய தீவிரமான நிபந்தனைகளை அது விலக்கும்.

நம் வாழ்வின் அளவுக்கும், தரத்திற்கும் உரியது.
நம் உடலின் வாழ்வு, உந்துதல், பழக்கத்திற்குரியன.
அது உண்மையானால்,
உன்னத உடலின் வாழ்வின் பரிணாமம் கனவாகாது,

வாழ்வு விலங்கினப் பிறப்பால் வரையறுக்கப்படாது,
அது விலங்கு வாழ்வு மரணத்தாலானது,
உணவு உட்கொள்ளும் சிரமமுடையது,
நோய்வாய்ப்பட்டு சிதையும் தன்மையுடையது,
திருப்தி தராது தேவைகளால் பாதிக்கப்படுவது,
கனவு போன்ற கருத்தற்ற நிலையிருக்காது.

சத்திய அடிப்படைக்குரியதாகும்.
தத்துவமான அறிவுக்குரிய சத்தியமாகும்.
மற்றவற்றுடன் ஒத்துப் போவதாகும்.
இதுவரை நாமறிந்த மற்றவையவை, அனுபவித்தது.
அதன் இருவகை இரகஸ்யங்களை நினைத்து ஆராய்ந்தோம்.

We have to be rational.
The principles of our being must be uninterrupted.

Their close mutual connection is too evident to us.

They are not possible.
One of them should be condemned and cut off.
While the others are capable of divine liberation.
Man ascends from the physical to the supramental.
It must open out the possibility of a corresponding ascent.

It is an ascent to the grades of substance to that ideal.
Or it is the causal body.
It is proper to the supramental body.
The conquest of the lower principles by the supermind.

They should be liberated into divine life.

A divine mentality must also be able to conquer.
It conquers the physical limitation.
It must be done by the power and principle of supramental substance.
This means the evolution must be freed from limitation of consciousness.



நாம் அறிவுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும்.
நம் ஜீவனின் தத்துவங்கள் தடையின்றிச் செயல்பட வேண்டும்.
அத்தத்துவங்களின் நெருங்கிய தொடர்பு தெளிவாகத் தெரிகிறது.
அதனால் அது சாத்தியமில்லை.
ஒரு தத்துவத்தை மறுத்து வெட்டி விலக்க வேண்டும்.
மற்றவை தெய்வீக விடுதலை பெறும்.
மனிதன் உடலிலிருந்து சத்திய ஜீவியத்திற்கு உயர்கிறான்.
அதனால் இதன் தொடர்புள்ள பரிணாமம் வழி விட வேண்டும்.
அந்த இலட்சியத்தின் பொருளின் தரத்திற்குரிய உயர்வு அது.
அது காரண தேகம்.
சத்திய ஜீவிய உடலுக்குரிய தேகம் அது.
தாழ்ந்த தத்துவங்கள் சத்திய ஜீவியத்தால் வெல்லப்பட வேண்டும்.
தெய்வீக வாழ்வை அனுபவிக்க அவை விடுதலை செய்யப்பட வேண்டும்.
தெய்வீக மனநிலை ஜெயிக்க வேண்டும்.
உடலின் குறுகிய வரையறையை அது வெல்ல வேண்டும்.
சத்திய ஜீவியப் பொருளின் பவராலும், தத்துவத்தாலும் ஜெயிக்க வேண்டும்.
அப்படியானால் பரிணாமம் ஜீவியத்தின் தடைகளினின்று மட்டும் விடுபட்டால் போதாது.

A mind and sense not shut up in the rules of physical ego.

It should not be limited to the poor basis of knowledge given by the physical organs and sense.
There must be a life power liberated more and more from the mortal limitations.
A physical life fit for the divine inhabitant.
Not in the sense of no attachment to our corporeal frame.
But an exceeding of the law of the body.
It is the conquest of death or early immortality.
The divine Bliss is the original Delight of existence.
The Lord of immortality comes pouring the wine of divine Bliss.
The mystic Soma into these jars of mentalised living matter.

Eternal and beautiful he enters into the sheaths of substance.
It is for integral transformation.
It is of the being and nature.

**ஜீவிய மணி**

எவர்மீது எந்தக் குறை மனதில் உதித்தாலும், அது நம்முள் புதைந்துள்ள நம் குறை தன்னை நமக்கு நினைவுபடுத்துவதாகும்.

**குறை கூறுபவனுக்குரியது.**



மனமும், புலனும் உடலின் அகந்தையால் கட்டுப்படக் கூடாது.
மனமும், புலனும், உடலுறுப்புகளும் புலன்களும் தரும் ஞானத்தால் கட்டுப்படக் கூடாது.
வாழ்வின் சக்தி அழியும் சக்திகளால் கட்டுப்படுத்தப்படக் கூடாது.
தெய்வீக ஜீவனுக்குரிய உடலும் வாழ்வும் தேவை.
நம் ஜட உடலுடன் பற்றற்ற சுதந்திரம் போதாது.
உடலைக் கடந்த தத்துவமுள்ள நிலை தேவை.
மரணத்தை வென்ற அமரத்துவம் தேவை.
தெய்வீக ஆனந்தம் ஆதியான வாழ்வின் ஆனந்தம்.
அமரத்துவ தெய்வம் தெய்வீக ஆனந்த சோமபானத்தை பொழிகிறது.
மனத்தால் நிரம்பிய ஜீவனுள்ள ஜடப்பொருளை அது நிரப்புகிறது.
சாஸ்வதமான அழகானவன் இந்த பொருள்களில் நுழைகிறான்.

முழுமையான திருவுருமாற்றதிற்கான ஏற்பாடது.
ஜீவனும் சுபாவமும் திருவுருமாற வேண்டும்.

**ஜீவிய மணி**

பலவகையிலும் முழு எதிர்ப்பு தெரிவிக்கும் கூட்டாளிகள் இருந்தால், எவர் உதவியையும் ஏற்காமல் எல்லாம் சாதிக்க முடியும் என அன்னை அறிவிக்கிறார்.

## இம்மாதச் செய்தி

# நம்ப முடியாத நல்லது மயக்கம் தரும்.





**Page 160: It sees the hurrying crowd of moment's stream**

**விரைவான க்ஷண நீரோட்டமானதைக் கண்டு**
**அமைதியான பெருந்தன்மை அண்மையை நோக்கி வருவதைக் கண்டு**

- ✡ இப்பெரு உலகம் தன்னையறியாமல் திரும்பி
- ✡ உறக்கத்தில் சிந்திக்கும் ஜடம் தன் இருளின் நிழலைக் காண்கிறது
- ✡ தவறிய மறைபொருளைத் தன்னிடமே மறைத்து
- ✡ காதுக்கெட்டாத கருணை மொழியை நம் இதயத்துள் புதைத்து
- ✡ புரிய முடியாத ஆத்ம சிரமம்
- ✡ ஒருவரும் அறியாத உயர்ந்த யந்திரம்
- ✡ கலையும் நுணுக்கமும் புலனன்றி எழுந்தன
- ✡ நுண்ணிய சங்கீத சதஸ் வாழ்வை விளக்கியது
- ✡ இதயம் எழுப்பாத இசையின் சிகரம் நிலைத்தது
- ✡ அறிந்தும் அறியாமல் திரும்பும் மனம்
- ✡ மேலோட்டமாக மேல்மனத்தை ஆராயும்
- ✡ வாழ்வு நோட்டம் பார்க்கிறது, இயற்கை வழியை அறிகிறது
- ✡ ஏன் வாழ்கிறோம், எதற்காக செயல்படுகிறோம் என அறியாமல்
- ✡ நியாயமான உபாயத்தைச் சலிக்காமல் பயன்படுத்தி
- ✡ பொறுமையாக சிறந்த விவரத்தின் நுண்ணிய சிக்கலை
- ✡ மதியைக் கடந்த ஆன்மாவின் துணிச்சலான புதுத்திட்டம்
- ✡ அர்த்தமற்ற எண்ணிறந்த வேலையின் பேரளவு உயர்ந்து

✡ நோக்கமற்ற அதன் முடிவுக்கு நோக்கத்தின் சிறப்பை சேர்த்து

✡ வண்ண மாடிகள் உயர்ந்து, வளரும் கட்டடம் சிறந்து

✡ கெட்டியான அஸ்திவாரம் அவளிட்டதின்மேல்

✡ இல்லாத வானில் எழும்பும் கற்பனைக் கோட்டைகள்

✡ கனவுலகக் கட்டடம் புதிரான சந்திர மண்டலத்தை எட்டி

✡ அழியும் சிருஷ்டி ஆகாயத்தை எட்டும்

✡ உலகை வெல்லும் மாயத் திட்டம் வேதனையால் வெளிப்பட்டு

✡ மங்கிய மனத்தின் அவநம்பிக்கை என்ற தரையில்

✡ சிரமப்பட்டு செப்பனிட்ட துண்டாடிய முழுமை

✡ ஊடுருவ முடியாத புதிரை உன்னும் மனம்

✡ நாமும் பகுதியான இப்பெருவாரியான திட்டத்தில்

✡ அதன் சுமுகம் நாம் வாழும் வாழ்வை அலைக்கழிக்கும்

✡ நம் சேவையை ஏற்கும் பெருநெறியை நாமறியோம்

✡ பிரபஞ்சக் கருவிகளின் பிதிர்ராஜ்ய வேலை

✡ பரந்த கடலின் சிறு ஓரத்தை நாம் காண்கிறோம்

✡ நாம் பெற்ற கருவிகள் அதன் பெரும் ஜோதியைப் பெறவில்லை.

**ஜீவிய மணி**

**மலைபோன்ற அமைதி மனத்துள் உள்ளது. எரிச்சலும் ஆசையும் அடங்கினால் க்ஷணம் தாமதிக்காமல் செயல்படும்.**



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/7. உள்ளெழும் எண்ணத்தை வெளியில் சமர்ப்பணம் செய்ய இயலாது

- சமர்ப்பணம் தவறாது பலிக்கும் அன்பர், சற்று பெரிய காரியங்களில் சமர்ப்பணம் எளிதல்ல எனக் காண்பார்.
- நமக்குச் சமர்ப்பணம் காரியம் கூடிவர, யோகத்தில் சமர்ப்பணம் அகந்தை அழியப் பயன்படுவது.
- அகந்தை பிரம்ம வாயில்வரை வரும்.
- அகந்தையை விலக்கி ஒரு காரியத்தைச் செய்தபின், அகந்தை அப்பலனைக் கேட்கும்.
- தைரியங்களில் பெரிய தைரியம் தன் குற்றத்தை ஏற்பது.
- காந்திஜி மகாத்மாவானது அதுபோன்ற தைரியத்தால்.
- ஆயுதமேந்திய புரட்சியின்றி சுதந்திரம் வராது என்பது பகவான் கருத்து.
- இறைவன் பகவானை, யோகத்தை மேற்கொள்ள புதுவைக்கு அனுப்பி விட்டார்.
- பகவானிடம் ஆர்வமாக வந்த பாரதி, பகவானுக்கு சுதந்திரத்தைவிட யோகம் முக்கியம் என்பதால் அவரைப் பார்ப்பதைக் குறைத்துக் கொண்டார்.
- அஹிம்சைக்குப் பெரிய பவர் இருந்தாலும், சுதந்திரம் பெறும் வலிமையில்லை. முஸ்லிம் மனம் மாறவோ, ஜின்னா பாகிஸ்தானை விட்டுக் கொடுக்கவோ அஹிம்சை பயன்படாது. காந்திஜி அஹிம்சையை வலியுறுத்தினார்.

  ஜின்னா போராட்டம் எழுப்பினார். இலட்சக்கணக்கானவர்கள் மாண்டனர்.

  காந்திஜியின் மனம் விழித்துக் கொண்டது.

  நாட்டில் வன்முறை எழுவது ‘என் அஹிம்சையால்’ என்று கூறினார். அது உண்மை.

உண்மையை ஒப்புக்கொள்ளும் தைரியமிருந்ததால், அந்த உண்மை மூலம் உண்மையான நாட்டின் வலிமை வெளிவந்தது.

நாடு பிரிக்கப்பட்டாலும், சுதந்திரம் பெற்றது.

உள்ளத்து எண்ணத்தை வெளியில் உள்ளபடி கூறுவது தைரியம்.

அது சமர்ப்பணத்தைவிட உயர்ந்த தைரியம்.

- 1942-இல் அதே உண்மையை ராஜாஜி எடுத்துக் கூறிய பொழுது மகாத்மா ஏற்கவில்லை.
- ஏற்றிருந்தால் பாகிஸ்தான் வந்திருக்காது.
- ஒருவரால் ஐம்பது லட்சம் தொகை புரட்ட முடியும் என்றால் சமர்ப்பணம் ஐம்பது கோடி தரும்.
- அந்த உயர்ந்த நிலையில் சமர்ப்பணம் எளிதல்ல.
- மனம் சமர்ப்பணத்தை விட்டு சிந்தனை செய்யும்.
- சிந்திக்கும் பொழுது காரியம் கெடுவதையும், சமர்ப்பணத்தின் பொழுது கூடி வருவதையும் காணலாம்.
- வாயால் பேசும் சொல்லைச் சமர்ப்பணம் செய்வது அரிது.

  மனம் எழுப்பும் சிந்தனைகளை வாயால் பேசலாம். பேசுவதைச் சமர்ப்பணம் செய்வது அரிது.
- முடிந்தால் உடனே செயல் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். அந்த நிலையில் செய்யும் சமர்ப்பணம், யோகத் தகுதியைத் தரும்.
- யோகம் என்பது எதுவும் செய்யாத நேரம் தானே சமர்ப்பணம் செயல்படுவது.

### ஜீவிய மணி

**ஆழத்தைக் கடந்த அமைதி ஆனந்தம் தரும் உறுதி. சொல்லழிந்து எண்ணம் கரைந்தால் ஜீவன் ஆனந்த அமைதியாக மலரும்.**



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## ஆத்ம சமர்ப்பணம்

கர்மயோகி

— இறைவன் உலகைப் படைத்தான் என்பதை பகவான், இறைவனே உலகமானான் என்பதால் உலகில் உள்ளவை அனைத்தும் இறைவனாகிறது. அதனால் அது தீமையாக இருக்க முடியாது.

உலகில் இருள் இல்லை. தீமையில்லை என்றாகிறது.

— பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் கடவுள்கள். படைத்தல், காத்தல், அழித்தல் அவர்கள் கடமை என்பது நாமறிந்தது.

பகவான் கூறுவது: பிரம்மாவும், மற்ற தெய்வங்களும் பிறந்த இடம் சத்திய ஜீவியம். அதுவே உலகைப் படைத்தது.

— மனிதன் மோட்சத்தை மறுத்து, சத்திய ஜீவியத்தை அடைந்து இறைவனாவது திருவுருமாறுவதாகும்.

— சமர்ப்பணம் ஆரம்பித்து, பலிக்க ஆரம்பித்த நிலையில் "எல்லாமே நம்பிக்கையிலிருக்கிறது. என்னால் முடியாததில்லை" எனத் தோன்றும். இதன் சூட்சுமம் "எதுவுமே என்னால் முடியாது" என்பது. கடவுள்கள் இந்த சூட்சுமத்தை அறியாத நேரம் இறைவன் அவர்களை அழைத்து ஒரு துரும்பை அவர்கள்முன் வைத்து தன்னை அவர்களிடமிருந்து விலக்கி அத்துரும்பை நகர்த்த வேண்டியபொழுது அவர்களால் முடியவில்லை. "இறைவனில்லாவிட்டால் நம்மால் துரும்பையும் நகர்த்த முடியாது" என கடவுள்கள் அறிந்தனர்.

90 இலட்ச வீட்டை 30 இலட்சத்தில் பல மடங்கு சௌகரியங்களுடன் கட்டி விட்டோம். நம்மால் அது முடியும் என்ற நேரம் அத்திறமையை சமர்ப்பணம் செய்ய வேண்டும். அதைச் செய்யும் மனிதன் தெய்வ நிலையைக் கடந்து உயர்கிறான்.

இது முதற்கட்ட வெற்றி, முதலில் அறிய வேண்டிய யோக சூட்சுமம். யோகத்தில் பல கட்டங்களுண்டு. ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒரு சூட்சுமம் உண்டு. எந்த நேரம் சூட்சுமம் தவறுகிறதோ, அந்த நேரம் யோகம் தடைபடும்.

சூட்சுமம் தவறாவிட்டால் யோகம் தடைபடாது.

—சமர்ப்பணம் பலிக்கும் ஆரம்ப நாட்களில் ஏதாவது ஒரு செயலில் சமர்ப்பணம் முடிவுவரை பலிப்பதுண்டு. உள்ளே அந்த பாக்கியம் விழிப்போடு இருக்கும் நேரம் தெரியும். வெளியே பலன் தெரியும். அப்படிப் பலித்தபின், அதை முழுமையாகச் செய்வது ராஜயோகத்தை 3 நாட்களில் செய்வது போலாகும் என்றாலும் அதைக் கண்டபின், அதுவே நினைவாக இருந்தால், அந்நினைவே இடைவிடாத நினைவாக, இடைவிடாத இதயத்தின் அழைப்பாக மாறும்.

- அழைப்பு முதலில் வாய்ச் சொல்லாகும்.
- அடுத்த கட்டத்தில் மனதில் எழும் சொல்லாகும்.
- மூன்றாம் கட்டம் மௌனமான சொல்லாகும்.
- அழைப்பு அடுத்த நிலையில் எண்ணத்திலிருந்து விரிந்து மாறி பரந்த அழைப்பாகித் தொடரும்.
- மனம் முழுவதும் அழைப்பை ஏற்கும் வரை நினைவு, சிந்தனை, கற்பனை, முடிவு போன்ற 12 அல்லது 15 மனத் திறமைகள் ஒவ்வொன்றாய்க் கரைந்து முழுமனமும் அழைக்கும்.
- அந்த அழைப்பும் மௌனமானால் அதை மனத்தின் மௌன அழைப்பு எனலாம்.
- மனத்தை அதுபோல் கடந்தால், அத்தனை கட்டங்களையும் உணர்ச்சியில் கடந்து அழைப்பு உணர்வைக் கடந்து, ஜீவனின் அழைப்பாகும். (இவற்றிடையே இன்னும் ஒரு கட்டமும் உள்ளது.)
- நம் அழைப்பு ஜீவனின் அழைப்பாவது அழைப்பு.



## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### 3. பிரச்சனை தீர நம் பாரத்தை அன்னையிடம் சேர்த்தல்

கணவனுக்குப் பொறுப்பில்லை; பிள்ளைக்குப் படிப்பு வரவில்லை; வைத்த நகைகளை மீட்கவில்லை; முதலாளியின் முன்கோபம் என்னைப் பெரிதும் பாதிக்கிறது; வாழ்க்கை பிரச்சனையாக ஆரம்பித்து, சிக்கலாக மாறி, வேதனையாகவும், நரகமாகவும் ஆகிவிட்டது; ஏன் பொழுது விடிகிறது என்று கண்ணில் ஜலம் வருகிறது; இன்றைய பொழுது எப்படிப் போகும் என்று கேள்வி எழுகிறது; என்பன போன்று சிலருக்கு வாழ்க்கை அமைந்து விடும். அவர்களுக்குக் கதி மோட்சம் இல்லையா? ஒரு கணம் சிறப்பு வாராதா? அன்னை அவர்களுக்கெல்லாம் ஏதாவது வழி காட்டுவாரா?

பாரத்தை நாம் சுமப்பதற்குப் பதில், அன்னையிடம் கொடுத்துவிட்டால் இனி பாரம் நமக்கில்லை. அன்னை பாரத்தை சுமப்பதுடன், அந்தப் பிரச்சனையையும் தீர்த்து விடுவார். பாரத்தை அன்னையிடம் சேர்ப்பதெப்படி?

நகை பாங்கிலிருப்பது அடிக்கடி நினைவில் உறுத்துகிறது என்றால், நகையை நாம் நினைத்துக் கொண்டிருப்பதற்குப் பதில், மனதிலிருந்து நகையை (பிரச்சனையை) ஒதுக்கி, விலக்கி, அன்னையை நினைவுகூர வேண்டும். அதன் பலனாக மனம் லேசாகிவிடும். பிரச்சனை தீர்ந்துவிடும்.

ஒரு பிரச்சனை ஒரு நாளைக்கு 40 முறைகள் நினைவில் வந்து கிலேசமடைந்தால் முதல் நாள் அன்னையை 10 முறைகள் நினைக்க முடிகிறது. நாள் செல்லச்செல்ல 10 நாட்கள் கழித்து ஒரு நாளைக்கு அன்னையை 40 முறைகளும் நினைக்க முடிகிறது. அதாவது பிரச்சனையை முழுவதும் அன்னைக்கு மாற்றியாகி விட்டது. அன்று பிரச்சனை முழுவதும் தீரும்.

என்று ஒரு பிரச்சனை மனதில் தோன்றும் ஒவ்வொரு முறையும் அன்னையை நினைவுகூர முடிகிறதோ, அன்று பிரச்சனை தீர்ந்துவிடும்.

## 4. அன்பர்கள் வழிபாடு

ஒரு முறை அன்னையை எப்படி வழிபடுதல் சிறந்தது என்ற பிரச்சனை பல்வேறு கோணங்களில் விவாதிக்கப்பட்டபொழுது ஒரு பிரெஞ்சுக்காரர் அன்னையிடம் இதுபற்றி குறிப்பிட்டார். **“Why do you want to worship the divine? Why don't you become the divine?”** இறைவனாகவே நாம் மாற முடியும் எனும்பொழுது, ஏன் நாம் இறைவனை எப்படி வழிபட வேண்டும் என்று விவாதிக்க வேண்டும் என்ற கருத்தை அன்னை வெளியிட்டார். அன்னை நாம் அவரிடம் பிரார்த்திக்காமலேயே அளித்துள்ள தெய்வீக வரப்பிரசாதம் அது: சாதகன் யோகத்தால் இறைவனாக மாறலாம்; அன்னையாகவும் மாறலாம்.

இந்த யோகச் சிகரத்திலிருந்து படிப்படியாக 100 நிலைகளில் உள்ள சித்திகளை அன்னை சாதகனுக்கு அளிக்க விரும்புகிறார். அவற்றுள் கடைசி நிலையில் உள்ளதுகூட மனிதனுக்கு மிகப் பெரியதாகத் தோன்றக்கூடியது. அவையெல்லாம் யோகத்திற்கே தம்மைச் சர்வபரித்தியாகமாக அர்ப்பணித்துக்கொண்ட சாதகர்களைச் சேர்ந்த இலட்சியங்கள்.

ஒரு வருஷமாக மாதம்தோறும் அன்னையின் சூழலில் **(atmosphere)** திரண்டு தியானம் செய்து வரும் அன்பர்கள் அதைப் பொறுத்தவரை சிறப்பானவர்களே. அவர்கள் யோக இலட்சியத்தைத் தேடும் சாதகர்கள் இல்லை. ஆனால், அன்னை மீதும், பகவான் ஸ்ரீ அரவிந்தரிடமும் தீராத பக்தியும், குறைவில்லாத நம்பிக்கையும் உடையவர்கள். இவர்களுடைய வீடுகளில், அல்லது பூஜை அறையில் அன்னையின் தியான மையச் சூழல் ஓரளவுக்குத் தெரியக்கூடும். அன்னாருக்குப் பயன்படக் கூடியவகையில் அன்னையின் முறைகளில் ஒன்றையோ, சிலவற்றையோ, பல முறைகளையோ எடுத்து



விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கருதி இக்கட்டுரையை எழுதுகிறேன்.

பக்தியும், நம்பிக்கையுமே அன்பர் வழிபாட்டின் அடிப்படை. அவை உயர்ந்தவை, சிறப்பானவை, அதுவே போதுமான அஸ்திவாரம். அவையின்றி வழிபாடில்லை; பலன் இல்லை. அவை இருப்பதே வழிபாடுதான்; அதற்குரிய பலன் தானே உண்டு. இதுவே பொதுவான உண்மை.

பொதுவான உண்மைக்கும் மேலாக, குறிப்பான உண்மை என்றும் ஒன்றுண்டு. புத்திசாலித்தனம் இல்லாமல் படிப்பு வாராது, புத்திசாலித்தனம் உள்ளவனுக்குப் படிப்பு தானே வரும் என்பது பொதுவான உண்மையானால், அதற்கும் மேலாகக் குறிப்பான உண்மையும் உண்டு. முயற்சி, புத்திசாலித்தனத்தைப் பிரகாசிக்கச் செய்யும் என்பதே அந்தக் குறிப்பான உண்மை. புத்திசாலித்தனம் போதுமான அளவிருந்தும் அதன் முழுப்பலனை எல்லோரும் அடைவதில்லை. பலன், முயற்சியின் அளவைப் பொறுத்தது என்பது நாம் அறிந்தது.

அதேபோல் பக்தியும், நம்பிக்கையும் உள்ள அன்பர்கள் தங்கள் சிறப்புக்குரிய முழுப்பலனையும் அடைய உதவும் முறைகள் பல உண்டு. அவற்றை எல்லோரும் அறிவார்கள். அம்முறைகளால் முழுப்பயன் அடைய நாம் செய்யக்கூடியது என்ன என்பதையே இங்கு நான் எடுத்துக்கொள்கிறேன்.

ஈடுபாடும், பக்தியும் உள்ளவர்கள் பலர் பின்வருமாறு சொல்ல நாம் கேள்விப்படுகிறோம்:

“நம்பிக்கைக்கு எல்லாம் குறைவில்லை. நடைமுறையில் மனம் பல வழிகளில் சென்று, கடைசியில் எதுவும் முடியாமற் போகிறது.”

“எனக்கு எப்பொழுதும் அன்னை நினைவு குறைவது இல்லை. இருந்தாலும் தரிசனத்தன்று உள்ள விசேஷம் மற்ற நாட்களில் இருப்பதில்லை.”

“நானும் பல முறைகளைக் கடைப்பிடிக்கத் தீவிரமாக ஆரம்பித்துள்ளேன். எல்லாம் இரண்டு, மூன்று நாட்கள்தாம். பிறகு பழையபடி இறங்கிவிடுகின்றன.”

"தியான மையத்தில் இருக்கும்போது இருப்பதைப்போல், தினமும் எதிர்பார்த்தால் எப்படி முடியும்?"

"எனக்கு ஏதாவது ஒரு விஷயம் என்றால்தான் தீவிர பக்தி வரும்."

இப்படிப்பட்ட எண்ணங்கள் இயல்பானவை. எல்லா விஷயங்களைப்போல, பக்திக்கும் ஏற்றம், இறக்கம் உண்டு என்பது உண்மைதான். இருந்தாலும் நமக்குள்ள பக்திக்குரிய முழுப்பலனையும் நாம் பெற வழியுண்டு என்பதை விளக்க நான் சொல்லும் ஒரே உதாரணம் பரீட்சைக்குப் படிக்கும் மாணவனே. கல்லூரியில் படிக்கும் மாணவன் ஆராய்ச்சி நிபுணனாகலாம் (research scholar), சிறந்த சிந்தனையாளனாக (original scholar) மலரலாம். தன் பாடத்தில் புதிய கருத்துகளைக் காணலாம் (can contribute to his subject), மேதையாகவும் வளரலாம். இவையெல்லாம் உயர்ந்த நிலைகள். அவற்றைத் தவிர்த்து பரீட்சை பாஸ் செய்து பட்டம் பெறுவதே குறிக்கோள் என்று கொண்டால் தன் அறிவின் திறனுக்குரிய அதிகபட்ச மார்க்குகள் வாங்குவது எப்படி? என்பதே என் விசாரம். I class வாங்கக்கூடிய மாணவன் வெறும் பாஸ் மட்டும் செய்தால் அது சரியில்லை, II class-ஐ தவறவிட்டாலும் அது முறையில்லை. State First வரக்கூடியவன் I class ஆகவோ, college first ஆகவோ வந்தாலும் சரியில்லை. பாஸ் செய்யக்கூடியவன் பெயிலாவதும் சரியில்லை. அதாவது ஒவ்வொரு மாணவனும் தத்தம் திறமைக்குரிய அதிகபட்ச மார்க்குகளை வாங்க ஒரு முறை உண்டானால், அவன் அந்த முறையால் பயன் அடைய வேண்டும்.

தொடரும்...

❀❀❀

**ஜீவிய மணி**

*எதிர்பார்ப்பது சிந்தனை.*
*சிந்தனை அழியாமல் எதிர்பார்ப்பது நிற்காது.*



## அன்பர் அனுபவம்

ராதிகா வெங்கடாசலம், சென்னை

ஸ்ரீ அன்னைக்கும் பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கும் இக்கடிதத்தை சமர்ப்பணம் செய்கிறேன்.

என் பெயர் ராதிகா. நாங்கள் அம்பத்தூர் தியான மையத்திற்கு கடந்த ஒன்பது வருடங்களாகச் சென்று அன்னையை வணங்கி வருகிறோம். என் கணவர் இன்று உயிருடன் இருப்பதே அன்னையின் அருளால்தான். தியான மையம் நடத்திக் கொண்டிருக்கும், திரு. பாலசுப்ரமணியன் அவர்களுக்கு எங்கள் குடும்பம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் மூலமாகத்தான் நாங்கள் அன்னையைப்பற்றி தெரிந்துக் கொண்டோம். என் மகள் கல்லூரியில் படிக்கும்பொழுதே அவளுக்குக் கேம்பஸில் வேலை கிடைத்தது. 1½ வருடங்களாக கேம்பஸில் வேலை கிடைத்த கம்பெனி கூப்பிடவில்லை. தியான மையத்தில் பரமேஸ்வரி என்ற சேவை அன்பர் எங்களை சாவித்ரி, ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள், லைப் டிவைன் விரிவுரைகள், அன்னையின் அருள் என்ற நான்கு புத்தகங்களையும் தினமும் படித்துக் கொண்டு வரச் சொன்னார்கள். அதேபோல், நான் தினமும் படித்துக் கொண்டு வந்தேன். படிக்க ஆரம்பித்த சில நாட்களிலேயே கேம்பஸில் தேர்வு செய்த கம்பெனியே கூப்பிட்டுவிட்டார்கள். அன்னைக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அம்பத்தூர் தியான மையத்தை நடத்தி, எங்களைப் போன்ற அன்பர்களுக்கும் பிரார்த்தனையின் வழி கூறும் திரு. பாலசுப்ரமணியன் மற்றும் அன்பர் பரமேஸ்வரி அவர்களுக்கு மறுபடியும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நன்றிகள் அன்னையே.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### *100. காலம் கனவேகமாக நகர்கிறது.*

- பதவி ஏற்றவருக்கு ஐந்து வருட பீரியட் ஆறு மாதமாகத் தோன்றும்.
- காதலை அனுபவிக்கும் நேரம் நேரமாகாது, மணி நிமிஷமாகும்.
- **Othello** என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தில் **Iago** என்பவன் வில்லன்.

  ஒரு பெரிய திட்டம் தீட்டி தன் தலைவர் தற்கொலை செய்துகொள்ளும்படி அது பலித்தது. இரவெல்லாம் அவர் மனதைக் கவரப் பேசியவன் வெற்றி பெற்றபொழுது, சூரியன் உதயமாயிற்று. தீட்டிய திட்டம் பலிக்கச் செய்த வேலை ஓரிரவு கழிந்ததையும் அறியவில்லை.
- அன்பர் மாலை சமாதிக்கு வந்தார். அன்று ஏழரை மணிக்குப் பொதுத்தியானம். எட்டு மணிக்கு முடிந்தது. வந்து அரை மணியாகிறது என உணர்ந்தார். இரண்டு மணி அரை மணியாக ஆத்மா நெகிழ்வால் சென்றது.
- படிப்பே வராத மாணவர்கள், SSLC வகுப்பு, ஒரு மாணவனும் பாஸாகாத வகுப்பு, தமிழாசிரியர் வருவார். இராமாயணம் நடத்துவார், பாட்டைப் பாடுவார், இலக்கண இலக்கிய நயங்களைக் கூறுவார். செய்யுளைக் கதையாகக் கூறுவார். மணியடித்தால் மாணவர்கள் ஏமாந்து போவார்கள். தமிழ், கதை, பாட்டு, சொல் நயம் மக்கு மாணவர்களை காலத்தின் கடுமையிலிருந்து விலக்குகிறது.
- குடும்பம் நடத்த முடியாத வீட்டில் வளரும் பெண்களுக்கு எப்படித் திருமணம் செய்ய முடியும். பெரிய பெண் முப்பதைத் தாண்டியது. அது இருபத்து ஐந்து ஆண்டுகட்குமுன். பெண் பார்க்க வரன் என இதுவரை வந்ததில்லை. வந்தால் பெண் கட்டிக்கொள்ள நல்ல



புடவையுமில்லை. பக்கத்து வீட்டுப் பணக்காரப்பெண் அன்பர். ஆசிரம தரிசனத்திற்கு வருபவர் அப்பெண்ணை அழைத்து வந்தார். திரும்பிப் போன கொஞ்ச நாட்கள் கழித்து, பம்பாய் வரன் வந்தது. இரு பெண்கட்கும் திருமணமாயிற்று. தம்பிக்கு பூணூல் போட்டனர். அப்பெண் எழுதிய நீண்ட கடிதம் உணர்ச்சிபூர்வமானது. விபரமான நன்றியறிதலைத் தெரிவிக்க முடியாமல் சிரமப்படும் எழுத்து. விபரமாக எழுதிய பெண் ஒரு கட்டத்தில் “அதற்கு மேல் நடந்தவையனைத்தும் கனவாக இருந்தது. இன்று-வரை கனவாக மனத்தை நிரப்புகிறது” என கடிதம் முடிகிறது.

மனம் உயர்ந்து ஆன்மாவானால், காலம் கடிய நடை போடும்.

அக்கறை ஆர்வமானால் நேரம் போவது தெரியாது.

வேலையில் மனமும் உணர்வும் ஈடுபட்டால் வேலை தெரியும்.

காலம் தெரியாது.

வாழ்வு மலர்ந்தால், வழக்கத்திற்கு மாறாக மலர்ந்தால், வழக்கமான காலம் தன்னை மறக்கும். நமக்கும் காலம் கண்ணுக்குத் தெரியாது.

பூரண யோக வாயில் திறப்பதின் ஆயிரம் வழிகளில் காலம் கழிவதும் ஒன்று. யோகம் மனிதர் குல மாணிக்கங்கட்கு மட்டும் உரிய இலட்சிய செயலான வாழ்வு. பூரண யோகம் செய்ய பூர்வ ஜென்ம புண்ணியம் தேவை. அல்லது இன்று செய்யும் புண்ணியம், பூர்வ ஜென்மம்வரைச் செல்வதாக அமைய வேண்டும் என்பது சட்டம்.

**ஜீவிய மணி**

*அர்த்தமற்றதழிய அர்த்தத்தின் அர்த்தம் தெரிய வேண்டும்.*

## அஜெண்டா

### ஆரோவில்லுக்குரிய மொழி இயல்பாக எழ வேண்டும்

Volume 11, page 57

- மொழிவது மொழி, மனிதனுடைய இயல்பான செயல்.
- மொழி வல்லுநர்கள் மொழி வளர்ச்சியை ஆராய்ந்தது ஏராளம், அறிந்தவை அநேகம். மொழியில் ஆர்வமுள்ளவர்க்குரிய ஆழ்ந்தகன்ற கடல் அது.
- சொற்கள் உருமாறுகின்றன, கருத்தும் மாறும், திரியும். அவை தனி சாஸ்த்திரம்.
- சாஸ்த்திரம் என்ற சமஸ்கிருத சொல் தமிழில் சாத்திரம் என்றாயிற்று.
- 'ழ' என்ற எழுத்து தமிழுக்கே உரியது. பழம், தமிழ் என்பவை அந்நியருக்கு வாராது. வாழைப்பழம் என்பது தொன்று தொட்டு மா, பலா, வாழையிலிருந்து வந்தது. தமிழ் போற்றப்படுமிடங்களில் 'வாளைப்பளம்' என அது உச்சரிக்கப்படுவதுண்டு.
- புதுவை பிரெஞ்சு மாநிலம்.
  **Politician** என்பதை நாம் பாலிட்டிஷியன் என உச்சரிப்போம்.
  புதுவையில் பிறந்தவர் பொலிட்டிஷியன் என்பர். அது பிரெஞ்சு உச்சரிப்பு.
- **Hostel** என்பதை ஹாஸ்டல் என்பது வழக்கு.
  ஹோஸ்டல் என சில இடங்களில் கூறுவர்.
  **Administration** என்றால் நிர்வாகம், **Account** என்றால் கணக்கு.
  ஹாலந்தில் **Administration** என்றால் கணக்கு.
- ஆசிரமம் எனில் தவம், யோகம் செய்யுமிடம்.
  அனாதை ஆசிரமம் என்ற பெயர் அனாதைகள் தங்குமிடத்திற்கு வந்து விட்டது.
  வழக்கு, வாழ்வு, சொல், கலந்து புது நிலை எழுவதுண்டு.
- புனிதச் சொற்கள் வசைச் சொற்களாகவும் மாறும்.



- குறவன் என்பது பழந்தமிழில் சான்றோர், தலைவன் என வழங்கியது.
  இன்று அது நரி பிடிப்பவனுக்குப் பயன்படுகிறது.
  அகராதி, மொழியின் அனைத்துச் சொற்களும் உடைய நூல்.
  அதிகப்பிரசங்கி என்ற பொருளில் இன்று வழங்குகிறது.
  பண்பு மாறும்பொழுது, சொல் வழக்கில் கருத்து மாறும், எதிராகவும் மாறும்.
  கூத்து என்பது பழந்தமிழ். டிராமா இலக்கிய நயமான சொல்.
  தெருக்கூத்து என்று இன்று வழங்குவது உன்னதமான சொல்லை தாழ்ந்த கருத்தை வெளியிடப் பயன்படுத்துகிறோம்.
  தந்தி போய் ஈமெயில் வந்துவிட்டது.
  பொதுவாக தந்தி கொண்டு வரும் செய்தி மரணம் என நாட்டில் வழக்கமாகி விட்டது.
  நம் நாட்டில் தந்தி சுருக்கமாக இருக்கும்.
  இங்கிலாந்தில் நூறு அல்லது இருநூறு சொற்களுள்ள தந்தி சென்ற நூற்றாண்டிலும் வழக்கமாக இருந்தாலும் கிராமப் புறங்களில் தந்தி வந்தால் தவறான செய்தியை எதிர்பார்க்கிறார்கள். 'தந்தி-இங்கிலீஷ்' என்ற சொல் ஆங்கிலம் தவறாக எழுதப்படுவதைக் குறிக்கும்.
- ஆரோவில்லில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிகள் கலப்பதால், அதன் வளர்ச்சி மொழி வல்லுநர்கள் ஆராய்ச்சிக்கும், ஆர்வத்திற்கும் உரியது.

### ஜீவிய மணி

**பெற்றதை விட்டால் மௌனம் பெறலாம்.
பெறாததை விட்டு விட்டால், மௌனத்தைக் கடந்த மௌனம் பெறலாம்.**

அன்னை இலக்கியம்

# நல்லதோர் வீணை செய்து

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இல. சுந்தரி

'சரிம்மா அழைத்து வருகிறேன்' என்று விடைபெற்று வீட்டிற்கு வந்தாள்.

நீண்ட நேரம் கழித்தே ஆர்த்தி விழித்தாள். பக்கத்தில் படுத்திருந்த பாரதியின் நினைவு வந்தது.

சுபா எல்லா வேலைகளுக்கிடையேயும் ஆர்த்தியின்மீதே கண்ணாயிருந்ததால் அவள் விழித்ததும் அருகில் வந்து 'குட்மார்னிங் பேபி' என்றாள் சிரித்துக்கொண்டே. சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் பனிரெண்டு மணிக்கு சங்கீத ஒலி இசைத்தது.

'பகல் பனிரெண்டு மணிக்கு என்ன குட்மார்னிங் பெரியம்மா?' என்றவள் பாரதியைப் பற்றிக் கூற நினைத்தவுடன் சுபாவே குறிப்பறிந்து கூறினாள். பாரதி காலை ஆறு மணிக்கே விழித்துக்கொண்டு வீட்டிற்குப் போகப் பிரியப்பட்டாள். 'நானே அவளை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தேன்' என்றாள்.

'தாங்ஸ் பெரியம்மா டிரைவருடன் அனுப்பாமல் நீங்களே போனீர்களே ரொம்ப தாங்ஸ்' என்றாள்.

'என்ன ஆர்த்தியிது? நம் அழைப்பிற்கு மரியாதைக் கொடுத்து அனுப்பிய பெண்ணை நான் மரியாதையாக நடத்தாமல் இருப்பேனா? உன் தோழியும் எனக்கு உன்போலதான்' என்று சுபா கூறியது ஆர்த்திக்கு நிறைவளித்தது.

'நீண்ட நேரம் கண் விழித்தது அசதியாக இருக்கிறதா ஆர்த்தி?' என்று கேட்டாள் சுபா.

'இல்லை பெரியம்மா. பாரதி மிகவும் கெட்டிக்காரி. ஆசிரியரை விடவும் அழகாகச் சொல்லித் தருவாள். அவளுடன்



படித்தது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்று கூறிய வண்ணம் பல் விளக்கப் போனாள் ஆர்த்தி.

அப்போதுதான், இரண்டுநாட்கள் படப்பிடிப்பு முடித்து வந்த சுமதி, அடுத்த பகுதியில் ஆர்த்தியின் குரல் கேட்பதைக் கவனித்தாள். இந்நேரத்தில் அவள் குரல் கேட்கிறதே. ஏன் பள்ளிக்குப் போகவில்லை. அவளுக்கு ஏதேனும் உடம்பு சரியில்லையோ எனக் கலங்கி, அந்தப் பகுதிக்குப் போனால் ஆர்த்தி என்ன செய்வாளோ என்று பயந்து கதவோரம் மெல்லச் சென்றாள். சுபா, சுமதியைக் கவனித்து விட்டதால் விரைவாக கதவுப்பக்கம் வந்து, 'என்ன சுமதி!, எப்போது வந்தாய்? ஷூட்டிங் நல்லபடியாக முடிந்ததா?' என்று மெல்லிய குரலில் விசாரித்தாள்.

'அதெல்லாம் நல்லபடியாய் நடந்தது. ஆர்த்திக்கு உடம்புக்கு என்ன? அவள் ஏன் ஸ்கூல் போகவில்லை' என்றாள் பதற்றமாக.

'சுமதி! அவளுக்கு இன்று முதல் ஸ்டடி லீவ். நேற்றிரவு கண் விழித்துப் படித்தாள். தாமதமாய் எழுந்தாள். வேறொன்றுமில்லை. நன்றாகத்தான் இருக்கிறாள். அவள் பல்விளக்கப் போயிருக்கிறாள். வந்து விடுவாள். நீ போய் ரெஸ்ட் எடு, பிறகு பார்ப்போம்' என்றாள்.

ஒரே வீட்டில் இரண்டு பிரிவு. இரண்டு குடும்பம். ஒருவேளை சுபாவிடம் விட்டுத் தனியாக வளர்க்க ஏற்பாடு செய்யாதிருந்தால் அவள் பாசம் தனக்குக் கிடைத்திருக்குமோ என்று ஒரு கணம் நினைத்தாள். ஆர்த்திக்கு ஓரளவு நினைவு தெரிந்தவுடனேயே தன் தொழிலையும், அது தொடர்பாய்த் தன்னைக் காண வரும் பிரமுகர்களையும் பார்த்தவுடன் அவள் தன்னை விட்டு விலகியது நினைவு வந்தது. சுபா மட்டும் இல்லையென்றால் அவள் வீட்டை விட்டே போயிருப்பாள். ஆதரவற்ற அநாதை என்று சொல்லிக் கொண்டு பாதுகாப்பற்ற நிலையில், அதுவும் வயதுக்கு வந்த நிலையில் பெண் குழந்தை என்ன பாடுபட்டிருப்பாள்? தன் கடந்த காலம் நினைவுக்கு வந்தவுடன் அவளைப் பற்றிய கொடிய கற்பனை எழுந்தது.

இரண்டு நாட்களாக படப்பிடிப்பு அசதிவேறு, கண நேரத்தில் மயங்கி விழுந்தாள்.

ஆர்த்திக்குச் சூடாக ஏதேனும் பருகக் கொடுக்க வேண்டும் என சமையலறைப் பக்கம் சுபா சென்றிருந்தாள். தற்செயலாக அந்தப் பக்கக் கதவு திறந்திருப்பதைக் கண்டு அதைச் சார்த்து-வதற்காகக் கதவுப்பக்கம் வந்த ஆர்த்தியின் பார்வை அம்மா மயங்கி விழுவதைப் பார்க்க நேர்ந்தது. ஓடிச்சென்று தன்னை மறந்து கிடந்த அம்மாவின் தலையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டு, தங்கள் பகுதிக்குச் செல்லும் வாயிலை நோக்கி பெரியம்மா வருகிறாளா என்று பார்த்தாள் ஆர்த்தி. காபியுடன் ஆர்த்தியைத் தேடி வந்த சுபா அந்தப் பகுதிக்குச் செல்லும் கதவு திறந்திருப்பதைக் கண்டு மூட வந்தவள் ஆர்த்தியின் சின்ன மடியில் சுமதி தலை வைத்துப் படுத்திருப்பது நம்ப முடியாததாயிருந்தது. இவள் எப்படி அங்கு போனாள். போக மாட்டாளே என்று எண்ணிய வண்ணம் ஆர்த்தியிருந்த இடத்திற்குப் பதற்றத்துடன் வரவே, ஆர்த்தி மெல்லிய குரலில் அவளை அருகே வரவழைத்து, ‘பெரியம்மா கொஞ்சம் தண்ணீர்க் கொண்டு வா. அந்தக் காபியை இப்படிவை’ என்றாள். துக்கத்திலும் மகிழ்ச்சி. இதைச் சுமதி உணர்வாளா? அவள் உணர்ந்தால் இவள் நீடிப்பாளா? என்ன விந்தையிது என்று எண்ணமிட்டபடி சுபா தண்ணீர் ஜாடியுடன் வந்தாள். அவளை அமரச்செய்து, அவள் மடியில் அம்மாவின் தலையை மெல்ல மாற்றினாள். தன் மெல்லிய விரல்களால் தண்ணீரை ஏந்தி அம்மாவின் முகத்தில் தெளித்தாள். அம்மா தெளிவடையத் தொடங்கும் போது, ‘பெரியம்மா! காபியை அவர்களுக்குக் கொடுத்துவிடு. நான் போய் வேறு தயாரித்துக் குடித்துக் கொள்வேன்’ என்று கூறி தாமதமின்றிச் சென்றுவிட்டாள்.

சுபா பிரமிப்பால் ஒரு கணம் செய்வதறியாது திகைத்தாலும் சரிப்படுத்திக் கொண்டாள். சுமதியை லேசாய்த் தடவிக் கொடுத்து வாயைத் திறக்கச் சொல்லி காபியைக் குடிக்க வைத்தாள். தெளிந்தவுடன் சுமதி ‘தனக்கு என்னவாயிற்று’ என்றாள். ‘ஒன்றும் ஆகவில்லை உன் அறைக்குப் போகலாம் வா’ என்று கைத்தாங்கலாய் அழைத்துப் போய், படுக்கையில்



படுக்க வைத்து, பக்கத்தில் அமர்ந்த சுபா, சுமதி உனக்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது, நான் ஆர்த்திக்குக் காபி எடுத்து வந்து அங்கு அவளைக் காணாமல் தேடியபோது அவளே என்னை அழைக்கும் குரல் கேட்டது. வந்து பார்த்தால் இங்கு (இந்தப்பகுதி வீட்டில்) உன் தலையைத் தன் மடிமீது வைத்திருந்தாள்.

இவ்வாறு சுபா சொல்லும் போதே சுமதியின் கண்கள் ஆனந்தக்கண்ணீர் வடித்தது.

‘என்னை அழைத்துத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி உன் முகத்தில் தெளித்து உன் மயக்கம் தெளிவித்ததும் அவள்தான். அவளுக்குக் கொண்டு வந்த காபியை உனக்குத் தரச்சொல்லி உன்னை என் மடியில் படுக்கவைத்து விட்டுச் சென்றாள்’ என்று கூறினாள் சுபா.

‘அப்படியா? நிஜமாகவா? நான் பாக்கியசாலிதான்’ என்று சுமதி கூறி முடிக்கும் போதே ஆர்த்தியின் குரல் அந்தப்பகுதி வாயிலிலிருந்து கேட்டது. ‘பெரியம்மா! சீக்கிரம் வா. நான் குளிக்க வேண்டும்’ என்றழைக்கிறாள் ஆர்த்தி. சுபா அங்கு இருக்கக் கூடாது என்று பொருள் அந்த அழைப்பிற்கு.

‘சுபா! நீ போய் விடு. நீயாவது குழந்தைக்கு இருக்கிறாயே. அதற்கு நான் கடவுளுக்கு நன்றி சொல்வேன்’ என்று கண் கலங்கி விடை கொடுத்தாள் சுமதி.

இந்தச் சூழ்நிலைகள் காரணமாய் வேலைக்காரர்கள் வீட்டோடு வைத்துக் கொள்ளப்படவில்லை. வெளி அவுட் ஹவுஸில் எப்போதும் இருந்துகொண்டிருக்க வேண்டும். போன் போட்டால் உடனே வரவேண்டும். காலையில் வீடு சுத்தம் செய்து விட்டுப் போய் விடவேண்டும். சமையல் மெனு எப்போது கொடுக்கிறாளோ அப்போது தயாரிக்க வேண்டும். ஆர்த்தியைப் பொறுத்தவரை சுபாவே எல்லாம் பார்த்துக் கொள்வாள். தேவைப்பட்டால் ஒன்றிரண்டு சிறுமிகள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்துக் கொள்வாள். வீட்டிற்கு வெளியே, தோட்டத்தில் எப்போதும் ஆட்கள் உண்டு. வீட்டிற்குள்ளே அனுமதியின்றி, அழைத்தாலன்றி யாரும்

வரமுடியாது. எனவே, சுபா அவுட் ஹவுஸுக்குப் போன் செய்து சுமதிக்குத் தேவையான வேலைக்காரப் பெண்ணை வரச் சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

‘அம்மா எப்படியிருக்கிறாள்?’ என்று ஆர்த்தி கேட்பாள் என்று எதிர்பார்த்தாள் சுபா. ஆனால் அப்படி ஒரு சம்பவமே நினைவில்லை போல் நடந்து கொண்டாள் ஆர்த்தி.

அன்றிரவு ஏழுமணி சுமாருக்கு ஆர்த்தியைப் பாரதியின் வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தாள் சுபா.

பாரதி வாயிலிலேயே நின்று ஆர்த்தியை உள்ளே அழைத்துப் போனாள்.

உள்ளே போகும்முன், ‘ஆர்த்தி! நான் எப்போது உன்னை அழைத்துப் போக வரவேண்டும்?’ என்று சுபா கேட்டதற்கு, நான் போன் செய்கிறேன் ஆன்ட்டி என்று பாரதி முந்திக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்த சுபாவிற்கு, வீடு வெறிச்சென்றிருந்தது. இந்தப் பதினைந்து ஆண்டுகளில் பள்ளிக்கூடம் செல்லும் நேரம் தவிர ஆர்த்தியை அவள் பிரிந்திருந்ததில்லை. பள்ளிக்கூட ‘டூர்’-களுக்குத்தான் அவள் சென்றிருக்கிறாள். இந்தச் சிறு பிரிவு தனக்கு இத்தனை வேதனை தருகிறதே, சுமதிக்குப் பெண்ணின் மறுப்பு எத்தனை வேதனை தரக்கூடும் என்று எண்ணி இரக்கப்பட்டாள்.

சுமதியின் உடல்நிலை குறித்து அறிய அவள் அறைக்கு வந்தாள் சுபா.

‘வா சுபா. உன்னைப் பார்த்தால் ஆர்த்தியைப் பார்ப்பது போலிருக்கிறது’ என்றாள் மகிழ்ச்சியுடன்.

மெதுவாக அவள் பக்கத்தில் வந்தமர்ந்து, அவள் நலம் விசாரித்தாள்.

‘நான் நலமாகி விட்டேன் சுபா. நீ இப்பொழுது இங்கு எப்படி வந்தாய்? ஆர்த்தி என்ன செய்கிறாள்?’ என்றாள் சுமதி. ஒருவேளை தன்மீது உள்ளூர அன்பு கொண்டு தன்னைப்



பார்த்துவர சுபாவை அனுப்பியிருப்பாளோ என்ற எதிர்பார்ப்பு அவளுக்கு.

‘அவள் வீட்டில் இல்லை. தன் தோழியுடன் சேர்ந்து எக்ஸாமுக்குப் படிக்க அவள் வீட்டிற்குப் போயிருக்கிறாள். நான் தான் அவளை அங்குக் கொண்டுவிட்டு வந்தேன். நேற்று அந்தப் பெண் பாரதியை, ஆர்த்திக்காக இங்கு வரவழைத்தேன். இன்று இவள் அங்கு போயிருக்கிறாள்.’

‘அங்கெல்லாம் போனால் அவள் எப்படி உணர்வாளோ?’ என்று தயங்கினாற்போலக் கூறினாள் சுமதி.

‘ஒன்றும் ஆகாது. அவள் தோழி நல்லபெண். படிப்பில் முதல்தரம். ஆர்த்தி அழகாகத்தான் தன் தோழியைத் தேர்வு செய்திருக்கிறாள். அங்கு போனால் இவள் கலகலப்பாய், மகிழ்ச்சியாய் இருக்கிறாள்’ என்றாள் சுபா.

‘ஏன் சுபா எனக்கு மட்டும் இப்படி நேர்கிறது? மாலாவைத் தெரியுமல்லவா உனக்கு? என்னைப் போலவே பிரபலமானவள் தான் அவளும். அவளுக்கும் என்னைப் போல் ஒரு மகள் இருக்கிறாள். அந்த மகள் எப்படி நடக்கிறாள் தெரியுமா? மாலா தன் மகளை ஷூட்டிங் ஸ்பாட்டுக்கோ, தொழில்துறை தொடர்பான விசேஷங்களுக்கோ அழைத்து வருவதில்லை. ஆனால் பொது விழாக்களுக்கு, உறவினர் விசேஷங்களுக்கு அழைத்து வருகிறாள். அவள் மகள் அவளை எப்படி நேசிக்கிறாள் தெரியுமா? அவள் வீட்டிற்கு ஒரு முறை சென்றிருந்தேன். தனக்காகத் தன் தாய் உழைப்பதாக உணர்ந்து பேசுகிறாள். வீட்டிலிருக்கும் போது அவளை அவள்மகள் தானே தாயாகிக் கவனித்துக் கொள்கிறாள்’ என்று ஏக்கத்துடன் சுமதி கூறினாள்.

‘நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையாக பதில் சொல்வாயா சுமதி?’ என்றாள் சுபா.

‘என்ன சுபா இப்படிக் கேட்கிறாய்? நான் இதுவரை உன்னிடம் பொய்யாகவா பேசி வந்திருக்கிறேன்?’ என்று எதிர்க்கேள்வி தொடுக்கிறாள் சுமதி.

‘அதற்கில்லை சுமதி. நம்முள்ளத்தில் ஒரு எண்ணம் ஆழமாக இருக்கும். நாம் மேலெழுந்த வாரியாய் ஒன்றைச் செய்து கொண்டிருப்போம். அதை நன்றாக ஆழ்ந்துணர்ந்து கண்டு-பிடிக்க வேண்டும். நீ உன் நடிப்புத் தொழிலைப் பெரிதும் விரும்புகிறாயா?’ என்றாள் சுபா.

‘ஆமாம் சுபா. அதிலென்ன சந்தேகம்? இல்லையென்றால் இப்படி இரவு பகல் பாராமல் படப்பிடிப்பில் கலந்து கொள்வேனா?’ என்றாள் சுமதி.

‘அப்படியானால் உன்மீது உனக்குப் பெருமித உணர்வு-தானா?’ என்றாள் சுபா.

‘என்ன சொல்கிறாய் சுபா? என்மீது எனக்குப் பெருமிதமா? இல்லை பெருமிதம் ஏதுமில்லை.’

(இதைச் சொல்வதற்குள் ஒரு கணம் தடுமாறிப் போனாள் சுமதி) ‘என் தொழிலை நான் உயர்வாக மதிக்கிறேன். ஆர்வத்துடன்தான் செய்கிறேன் என்பது என்னவோ உண்மை தான். ஆனால் என்மீது எனக்கு எவ்வித பெருமிதமும் இல்லை சுபா. சிலநேரம் வாழ்வில் தொழில் ரீதியாய்ச் சந்திக்கும் அவலங்கள் என்னை உள்ளே கருகிப் போகச் செய்கின்றன. எனக்கு வெறுப்பு வருகிறது. என்னையே நான் வெறுத்துக் கொள்கிறேன். என் ஒரே மகிழ்ச்சியாய் ஆர்த்தியைத்தான் நினைத்தேன். அந்தச் சந்தோஷமும் எனக்குக் கிடைக்கப் போவ-தில்லை. உண்மையில் இந்த வாழ்வில் பெருமையைவிட அந்தரங்கமாக வெறுப்புகளையே சந்தித்தேன். அந்த அவலங்கள் என் குழந்தைக்கு வரக்கூடாது என்றுதான் அவளைக் கருவில் கலைத்திட எண்ணினேன். வசந்தி என் வாழ்வில் வசந்தமாய் வந்து இனிமை சேர்த்தாள். ஆனால் ஆர்த்திக்கு ஏனோ என்னைப் பிடிக்கவில்லை’ என்றாள் சுமதி.

‘உண்மையைச் சொல்லவா சுமதி. நீ மேலுக்குத்தான் திரைப்பட நடிகை. உண்மையில் அந்தத் துறையின் அவலங்-களைச் சந்தித்து அதன்மேல் உனக்கு வெறுப்பே அதிகமா-யுள்ளது. நீ அந்நியக் காற்று மேலே பட்டாலும் சுருங்கிப் போகும் சுபாவம் படைத்திருக்கிறாய். உன் உள்ளாழத்தில் நீ



எதிலும் தூய்மையையே நேசித்திருக்கிறாய். அதுதான் உன் மகளாய் உருவெடுத்துள்ளது. உன் தோற்றத்தில் உன் புற வாழ்வில் உனக்குப் பிடித்தமில்லை. உன் மகளுக்கும் அதில் பிடித்தமில்லை. உன் உள்ளாழத்தில் உள்ளதை அவள் தன் ஆழ்மனத்தில் உணரும்போது உன் மீதுள்ள வெறுப்பு அன்பாய் உருமாறும். உருமாறிய அன்பின் வலிமையை அப்போது நீ அனுபவிக்கத்தான் போகிறாய்.’

இவள் என்ன சொல்கிறாள்? சிறிதுநேரம் குழப்பமாயிருந்தது.

‘சரி சுமதி. இன்று உனக்கு உடம்பும், மனமும் சரியில்லை. அமைதியாகத் தூங்கி எழுந்தால் எல்லாம் சரியாகிவிடும்’ என்றெழுந்தாள் சுபா.

‘எங்கே போகிறாய் சுபா? ஆர்த்திதான் அங்கில்லையே. இன்றிரவு நீ என்னுடன் இரு. ஆர்த்தியைப் பற்றி ஏதேனும் சொல். கேட்டால் அவளைப் பார்ப்பது போல் மகிழ்ச்சியாய் இருக்கிறது’ என்றாள் சுமதி.

‘ஆர்த்தி என்றதும் நினைவுக்கு வருகிறது. அப்பொழுதே கொண்டு விட்டேன். போன் செய்து விசாரித்துவிட்டு வருகிறேன் என்று தங்கள் பகுதிக்குப் போக எழுந்தபோது, இரு, இரு. இங்கேயே பேசலாம்’ என்று செல்போனை எடுத்து வைத்துக் கொண்டு, பாரதி வீட்டு போன் நம்பர் கேட்டாள். அவள் சொல்லச்சொல்ல எண்களை போனில் பதித்துக்கொண்டு ரிங் போவது தெரிந்ததும் செல்லை அவளிடம் கொடுத்தாள்.

‘ஹலோ!’ என்று சுபா அழைத்ததும், பாரதியின் அப்பா மறுமுனையில் குரல் கொடுத்தார்.

‘சார். நான் ஆர்த்தியின் பெரியம்மா பேசுகிறேன். குழந்தை படிக்கிறாளா?’ என்றவுடன் போனை ஆர்த்தியிடமே கொடுத்-திருப்பார் போலும், ‘ஹலோ! பெரியம்மா. நீ இன்னும் தூங்கவில்லையா?’ என்றாள் ஆர்த்தி.

‘எப்படியடா எனக்குத் தூக்கம் வரும்? உன்னைப் பிரிந்து என்றாவது உறங்கியிருக்கிறேனா? அது போகட்டும் படிக்-கிறாயா? அதற்காக விடியவிடிய படிக்க வேண்டாம். எப்போது

போன் செய்தாலும் உடனே வந்து அழைத்துப் போகிறேன்' என்றாள் சுபா.

'போ பெரியம்மா. உற்சாகமாய்ப் படிக்கும் போது தடுக்காதே. எக்ஸாமெல்லாம் முடியட்டும். நன்றாகத் தூங்கிக் கொள்ளலாம். சரி சரி என்னை நினைத்துக்கொண்டு நீ விழித்திருக்காதே. நான் பத்திரமாய் வருவேன். கவலைப்படாதே பெரியம்மா. குட் நைட்' என்று வைத்துவிட்டாள்.

'என்னைக் கவலைப்படாதே என்று சொல்லும் அளவுக்குப் பெரிய மனுஷி ஆகிவிட்டாள்' என்று சொல்லிக்கொண்டே செல்போனை சுமதியிடம் கொடுத்தாள்.

அவள் பேசப் பேச அவளை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த சுமதி, செல்லைக் கையில் பெற்றதும் என்ன பேசினாள்? எப்படியிருக்கிறாள் என்றெல்லாம் ஆர்வத்துடன் கேட்டுவிட்டு, 'சுபா! நேரமாகிவிட்டது, ஆர்த்தி சொன்னது போல் கவலைப்படாமல் தூங்கு போ' என்று அவளை அவள் பகுதிக்கு அனுப்பிவிட்டாள்.

அவள் சென்றபிறகு ஆர்த்தியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். பாரதியின் வீட்டு போன் நெம்பரை நினைவுபடுத்திச் செல்லில் இருத்திக் கொண்டாள். ஆர்த்திக்குப் பதினைந்து வயதாகிவிட்டது என்றாலும் அவள் குழந்தைதான். அவள் குரல் கேட்க எத்தனை இனிமையாயிருக்கிறது? எத்தனை அக்கறையுடன் சுபாவைக் கவலைப்படாதே தூங்கு என்று சொல்கிறாள். இதை மட்டும் அவள் எனக்குச் சொல்லி-யிருந்தால் என் துயரமெல்லாம் கரைந்து, நான் வானில் அல்லவோ பறப்பேன் என்று எண்ணியபோது, பாரதிவீட்டு போனில் ஆர்த்தியை அழைத்து அவள் குரலைக் கேட்டால் என்ன விளைவு நேருமோ என்று அச்சம் எழுந்தது. பேச வேண்டும் என்ற ஆர்வம் அச்சத்தை எதிர்த்தது.

செல்லில் பாரதி வீட்டுப் போனில் தொடர்பு கொள்ள, எதிர்ப்பக்கத்தில் ஒரு பெண்மணியின் குரல் கேட்டது. நல்ல வேளை ஆர்த்தி எடுக்கவில்லை எடுத்திருந்தால் அவள்



அருமையான சூழல் என்னால் கெட்டுவிட்டது என்ற ஆத்திரம் வரும். மாற்றார் வீட்டில் தன் ஆத்திரத்தைக் காட்டவும் இயலாது தவிப்பாள் பாவம் என்று எண்ணியது மனம். ஆனாலும் ஆர்த்தியின் குரலைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் மட்டும் தணியவில்லை.

எனவே, யார் என்று போனில் கேட்டவர்க்குச் சமயோசித-மாய் 'ஆர்த்தியின் வீட்டிலிருந்து' என்று மட்டும் கூறினாள்.

உடனே மறுபக்கத்தில், 'ஓ ஆர்த்தியின் பெரியம்மாவா? இதோ ஆர்த்தியைக் கூப்பிடுகிறேன்' என்ற பதில் வந்தவுடன் சுமதிக்குப் படபடப்பாயிருந்தது. குரலைக் கேட்க ஆவல். குழந்தையின் பிரதிபலிப்பு எப்படியிருக்குமோ என்று அச்சம். ஆவலுக்கும், அச்சத்திற்குமிடையே அலைபாய்ந்து கொண்-டிருக்கும்போதே,

'என்ன பெரியம்மா இன்னும் தூக்கம் வரவில்லையா? என் எக்ஸாம் முடியும்வரை இந்தப் பாசத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட வேண்டும். அப்பொழுதுதான் உன் பெண் பெரிய பெயர் வாங்க முடியும். நானில்லாமல் சாப்பிட்டாயா இல்லையா? பாலாவது குடி' என்று கூறிக் கொண்டே-யிருக்கிறாள்.

செந்தமிழ் நாடு என்னும்போது பாரதியார்க்குத் தேன் வந்து காதில் பாயுமாமே. அப்படித்தானிருந்தது சுமதிக்கு. தன் மகளின் குரல். பரிவான உரிமையான பேச்சுகள். இப்படி-யெல்லாம் கூட தன் மகள் தன்னிடம் பேசுவாளா? இது கனவா? கற்பனையா? இல்லை நிஜமே தானா? மெய்ம்மறந்தாள் சுமதி.

'என்ன பெரியம்மா? சொல்வதெல்லாம் புரிந்ததா? போனைக் கையில் வைத்துக்கொண்டே தூங்கி விட்டாயா?' என்றாள். சிரித்துக்கொண்டே கூறியிருக்கவேண்டும் என்று யூகித்தாள்.

'உம், உம்' என்று பேசாமல் உம் கொட்டினாள். பேசினால் ஆர்த்தி தன்னை அடையாளம் கண்டு கொள்வாள் என்று அச்சம்.

‘பெரியம்மா! கவலைப்படாமல் தூங்கு. காலையில் ஐந்து மணிக்குக் கார் கொண்டுவா. வைத்துவிடட்டுமா?’ என்றாள்.

‘உம், உம்’ என்றே பதிலளித்தாள் சுமதி. குழந்தை போனை வைத்துவிட்டாள். இனி எப்போது இது கிடைக்குமோ? நாளையே தெரிந்துவிட்டால் குழந்தையின் அமைதியான போக்கில் சலனம் வந்துவிடுமே என்ற கவலை. கடவுளை வேண்டிக்கொண்டு, மீண்டும், மீண்டும் ஆர்த்தியின் இனிய குரலை, உரிமையான பேச்சை அசை போட்ட வண்ணம் ஆனந்தமாய் உறங்கினாள். எத்தனை இனிய அனுபவம் இது. புகழும், பாராட்டும் தரமுடியாத இனிமையல்லவா இது.

சுபா இரவெல்லாம் ஆர்த்தியைப் பற்றி எண்ணிய வண்ணம் உறங்காது பின்னிரவில்தான் உறங்கினாள். காலையில் ஐந்து மணியெல்லாம் கடந்துவிட்டது. ஆர்த்தியை பாரதியின் அம்மாவே கொண்டுவிட்டாள். ‘உள்ளே வந்து காபி குடித்து விட்டுப் போகலாம்’ என்று பாரதியின் அம்மாவை ஆர்த்தி உபசரித்தாள். நேரமாகிவிட்டது. ‘இப்போது வேண்டாம். பிறகு ஒருநாள் சாவதானமாய் வருகிறேன்’ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் பாரதியின் தாய்.

உள்ளே ஓடி வந்த ஆர்த்தி, சுபா உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, பேசாமல் அவள் பக்கத்தில் படுத்துக்கொண்டாள். திடீரென உணர்வு வந்தது போல் ஆர்த்தியின் கை தன்மேல் பட்டதும் விழிப்பு வந்துவிட்டது. ‘அடடா! தூங்கி விட்டேனே. நான் போய் அழைத்து வராமல் இவள் எப்படி வந்திருப்பாள்? மணி என்னவாயிருக்கும்’ என்று பதற்றமானாள்.

‘ஆர்த்தி எப்படி வந்தாய்? எப்போது வந்தாய்? ராத்திரி பூராவும் தூக்கமில்லையடா. என்னையறியாமல் தூங்கி-யிருக்கிறேன். பெரியம்மாவை மன்னித்து விடடா. இதற்குத்தான் நம் வீட்டிலேயே படி என்றேன் என்று மன்னிப்பு வேண்டும்’ தோரணையில் பேசினாள்.

ஆர்த்திக்கு வந்தபோதிருந்த கோபம் தணிந்துவிட்டது. ‘சரி பெரியம்மா நேற்றிரவு இரண்டு முறை போன் செய்தாயே,



நான்தான் காலையில் ஐந்து மணிக்கு காரை எடுத்துக்கொண்டு வா. கவலைப்படாமல் தூங்கு என்றேனே’ என்றாள்.

‘இரண்டு முறை போன் செய்தேனா? இவள் என்ன சொல்கிறாள் என்று தனக்குள் நினைத்தாள் சுபா. ஒருவேளை மகளுடன் பேச ஆசைப்பட்டு சுமதி போன் செய்திருப்பாளோ? அப்படியிருந்தால் குரலைக் கேட்டதும் போனை வைத்திருப்-பாளே’ என்று யோசித்துக் கொண்டே இருக்கும் போது, ‘அது என்ன பெரியம்மா உம், உம் என்று ஒரு மொழி. போனில் இரவு பேசினீர்களே அதைச் சொல்கிறேன். பேச்சு மறந்து விட்டதா?’ என்றாள் சிரித்துக்கொண்டே.

சுபாவிற்கு இப்போது புரிந்துவிட்டது. தான் ஆர்த்தியுடன் போனில் பேசியதை எத்தனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். முதலில், இரவு அங்கேயே தங்கும்படிக் கூறியவள், பிறகு திடீரென நீ போய் தூங்கு என்று இங்கு அனுப்பி வைத்தாளே. செல்போனில் ஆர்த்தியுடன் பேசவிட்டு, நெம்பரைக் குறித்து வைத்து தன்னை அனுப்பியபின் பெண்ணுடன் பேச ஆசைப்பட்டிருக்கிறாள். குரலை மறைக்க பேசாது உம், உம், என்று சொல்லி அவள் பேசுவதைக் கேட்டு ரசித்திருக்கிறாள் என்று யூகித்துவிட்டாள்.

‘ஒன்றுமில்லை ஆர்த்தி, தூக்கக்கலக்கத்தில் உம், கொட்டி விட்டேன்’ என்றாள் சுபா.

‘இரவெல்லாம் தூக்கமில்லை என்றாய். இப்போது தூக்கக் கலக்கம் என்கிறாய். என்னைப் பிரிந்தாலே ஏதேனும் ஆகிவிடும் உனக்கு. இன்னும் நான் மேல் படிப்பெல்லாம் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீ இதற்கே இப்படியிருக்கிறாய்’ என்று அவளை கேலி செய்தபடி ‘சரிசரி எனக்குத் தூக்கம் வருகிறது என்னை எழுப்பாதே’ என்று 5.30 மணிக்குமேல் தூங்கப்போனாள்.

அவள் அழகிய குழந்தைத்தனம் மாறாத முகம், இனிய பேச்சு, அன்பு, அவளிடம் காட்டும் உரிமையாவற்றையும் எண்ணி நெகிழ்ந்து போனாள் சுபா.

அடுத்த பகுதி கதவுப்பக்கம் சுமதி தயங்கிய வண்ணம் நின்றிருந்தாள். ஆர்த்தி உறங்கிவிட்டதை அறிந்து மெல்ல வெளியே வந்த சுபா, கதவருகில் சுமதி நிற்பதைப் பார்த்து விட்டு, 'உள்ளே வா சுமதி! அவள் தூங்கிவிட்டாள். இரவு கண்விழித்த அசதி' என்று கூறினாள்.

மிகுந்த கவனத்துடன் சிறிதும் சப்தமிடாது வந்த சுமதி, உறங்கும் மகளை எட்ட இருந்து பார்த்தாள். தன் மூச்சுக்காற்றுப் பட்டால் அவள் விழித்துக் கொள்வாளோ என்ற பயம்.

சுபாவிற்கு மிகவும் வேதனையாக இருந்தது. இருவரும் சற்று வெளியே வந்து பேசிக்கொண்டனர். 'கவலைப்படாதே சுமதி. எல்லாம் நல்லதற்குத்தான். அவள் பள்ளித்தேர்வுகள் முடிந்து விடுமுறை விடட்டும். எங்கேனும் வெளியூர் அழைத்துக் கொண்டு போய் அவள் உன்னைப் புரிந்து கொள்ளும்படி ஏதேனும் செய்யமுடியுமா என்று பார்க்கிறேன்' என்றாள் சுபா.

பாரதி வீட்டிலும், இங்குமாக இருவரும் அட்டவணை போட்டுப் படித்தனர். தேர்வும் வந்துவிட்டது. அவள் தேர்வு விபரங்களைக் கேட்டறிந்து சுமதி அந்த நாட்களில் வெளி வேலைகளை ரத்து செய்துவிட்டு ஆர்த்திக்காக கடவுளைப் பிரார்த்திப்பதில் தீவிரமாய் இருந்தாள். ஒவ்வொரு நாளும் ஆர்த்தி தேர்வுக்குப் புறப்படும்போது மறைந்திருந்து மனம் கனிந்து மானசீகமாய் வாழ்த்தியனுப்பினாள். சுபா வழக்கம் போல், அவள் தேவைகளைக் கவனித்து உரிய நேரத்தில் தானே தேர்வு மையத்திற்கு அழைத்துச் சென்று அவள் தேர்வு நன்கு எழுதப் பிரார்த்தித்துக் காத்துக் கொண்டிருந்து முடிந்த-வுடன் அழைத்து வருவாள். அன்றன்றைய தேர்வு எப்படி இருந்தது என்று கேட்டு சந்தோஷப்படுவாள். ஒரே ஒரு தேர்வு வரலாறு பற்றியது, அதில் தனக்கு நல்ல மதிப்பெண் கிடைக்காது என்று சோர்ந்து போனாள் ஆர்த்தி. அதை ஈடு செய்யும் அளவிற்குக் கணிதம், அறிவியல், ஆங்கிலம் மூன்றிலும் மிகச்சிறந்த மதிப்பெண் எடுக்கப்போகிறாய் பார் என்று அவளைத் தேற்றிக் கொண்டிருந்தாள் சுபா. மகள் தேர்வு



நன்றாகச் செய்திருக்கிறாளா என்று அறிய சுமதிக்கு மிகுந்த ஆவல். ஆனால் இந்த நாட்களில் சுபாவைத் தனியே சந்திக்க வாய்ப்பே இல்லாதிருந்தது.

தேர்வுகள் எல்லாம் முடிந்துவிட்டது என்பதால், அடுத்த பகுதியின் வாயிற்கதவில் நின்று 'மெஷ்டோரை' திறவாமல் 'சுபா' என்றழைத்தாள்.

'என்ன சுமதி!' என்று கதவின் பக்கம் வந்தாள் சுபா.

'ஆர்த்திக்குத்தான் தேர்வெல்லாம் முடிந்து விட்டதே. நாமெல்லோரும் எங்கேனும் உல்லாசப் பயணம் போய் வருவோமா?' என்றாள்.

சுபாவிற்குச் சங்கடமான நிலை உருவானது. ஆர்த்தியின் முகம் இறுக்கமாயிற்று. உடனே சுபா சமயோசிதமாய், ஆர்த்தி லீவில் ஏதேனும், 'கோர்ஸ்' போகப்போகிறாளா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு சொல்கிறேன் சுமதி என்றாள்.

அவள் முடிக்கு முன்னே ஆர்த்தி சற்றுக் கடுமையாக 'பெரியம்மா! நான் யாரோடும், எங்கும் உல்லாசப் பயணம் செல்லப் பிரியப்படவில்லை என்று உங்கள் தங்கைக்குச் சொல்லிவிடுங்கள். இந்த லீவில் நான் யாரேனும் ஒரு மகானைத் தரிசிக்கப் போகிறேன். என்னுடன் யாரும் வரவேண்டாம்' என்று கூறிவிட்டு திரும்பிக் கொண்டாள்.

சுமதிக்கு ஏன் கேட்டோம் என்றாயிற்று. 'சுபா! நான் ஷூட்டிங் கிளம்புகிறேன். லீவிற்கு நீங்கள் எங்குச் சென்றாலும் எனக்குத் தடையில்லை' என்று தான் விலகிக் கொண்டதைத் தெரிவித்துவிட்டு உள்ளே போய்விட்டாள்.

சுபா ஆர்த்தியின் அருகில் வந்து, 'ஆர்த்தி! நீ எவ்வளவு நல்ல பெண். இந்தப் பிரச்சனையை எப்படிச் சமாளிப்பது என்று எனக்குத் தெரியாதா. ஏன் அப்படி அவசரமாய்ப் பேசினாய்?' என்று நயமாய்க் கூறினாள்.

மன்னிப்பு வேண்டுவது போல் அவள் கையைப் பிடித்துக்கொண்டு அவளைப் பார்த்தாள். சுபா அன்புடன் அவளை அணைத்துக் கொண்டாள்.

ஆர்த்தி நன்றாக உறங்கிய பிறகு, மெதுவாக எழுந்துபோய் சுமதியைப் பார்த்தாள் சுபா.

‘என்ன சுபா? ஆர்த்திக்கு என்மீது கோபம் ஆறவில்லையா?’ என்று வருத்தத்துடன்.

‘சீச்சி. அவளுக்கு உன் மீது கோபம் இல்லை. சிறு பெண் என்ன வருத்தம் என்பதைச் சொல்லத் தெரியாமல் தவிக்கிறாள். புரிந்து கொள்ளும் பக்குவம் வந்தால் மாறிவிடுவாள். அது போகட்டும். நீ ஆர்த்தியைக் கருவுற்றபோது ஒரு பெண்ணின் பாதுகாப்பில் இருந்ததாய்ச் சொல்வாயே அவள் முகவரியைக் கொடு. நான் ஆர்த்தியுடன் சென்று சில நாட்கள் அங்கிருந்து விட்டு வருகிறேன். ஆர்த்திக்கு அவள் யார், நான் ஏன் அங்கு போகிறேன் என்பதெல்லாம் சொல்லப் போவதில்லை’ என்றாள்.

‘தஞ்சைக்குப் பக்கத்தில் பச்சிலைக்காடு என்று ஒரு சிற்றூர். அங்கு மேலத்தெருவில் அவள் இருப்பு. மேலத்தெரு என்பது ஒரு அடையாளம்தான். இருபது அல்லது இருபத்தைந்து வீடுகள் கொண்ட ஒரு பகுதி அவள் இருக்குமிடம். அந்தக் காலத்துப் புராணங்களில் வரும் முனிவர்கள் வாழும் காட்டுப் பகுதியில் உள்ள பர்ணகசாலை என்றுதான் சொல்ல வேண்டும். வீடு குடிசையாய் இராமல் நவீன வசதிகளுடன் இருக்கும். ஆனால் இந்தச் சென்னை மாநகர் போல ஒரே மின் விளக்கு-களால் நிறைந்த கட்டிடங்கள் ஏதும் அக்கம் பக்கம் இரா. எது வேண்டுமானாலும் தஞ்சைக்குத்தான் செல்ல வேண்டும். ஒவ்வொரு வீட்டையும் சூழ்ந்து காம்பவுண்ட் சுவருக்குப் பதில் குரோட்டன்ஸ் வேலியமைத்தாற் போலிருக்கும். பகுதியின் நுழைவாயிலில் கம்பிகளால் வேலைப்பாடு செய்த இரும்புக் கதவிருக்கும். சுவரேயில்லாமல் இரும்புத் தூண்களை நட்டு அந்தக் கதவு இணைக்கப்பட்டிருக்கும். இந்தச் செடிகள் சுவர் தரும் பாதுகாப்பைத் தருமா? சுவரேயில்லாமல் கதவு மட்டும் எதற்கு என்று ஒருமுறை கேட்டேன். இது வழி என்பதற்கு அடையாளம் கதவு. இலட்சுமணன் கிழித்த கோட்டைவிட வலுவானது இந்தச் செடிகளால் அமைந்த வேலி. இவை



யாவுமே அடையாளம்தான். மனிதனுக்கு நோக்கம் மறவா-திருக்கத்தான் இந்தச் சுவர், கதவு என்ற அடையாளங்கள். எல்லையைத் தாண்டக்கூடாது என்ற சுயக்கட்டுப்பாடு வரும் போது அடையாளங்கள் கூடத் தேவையில்லை என்பாள். அந்தக் காட்டுப் பகுதியில் ஆர்த்திக்கு இருப்புக் கொள்ளுமோ, என்னவோ?’ என்றாள் சுமதி.

‘இல்லை சுமதி. அவளை உன்னைவிட நான் நன்றாக அறிவேன். இந்த நகரத்தின் ஆடம்பரங்களையும், சந்தடி-களையும் அவள் விரும்புவதில்லை. அவள் அமைதியைத், தூய்மையை சுயக்கட்டுப்பாட்டைப் பெரிதும் விரும்புகின்றவள். இயற்கைச் சூழல் அவளுக்கு மிகவும் பிடிக்கும். அவர்களுக்குத் தெரிவித்து வரலாமா என்று கேட்டுச் சொல்’ என்றாள் சுபா.

‘ஆர்த்தியிடம் என்ன சொல்லி அழைத்துப் போவாய்?’ என்றாள் சுமதி.

‘என் சிநேகிதி ஒருத்தி மகான் நிலையில் இருப்பவள். அவளுடன் சில தினங்கள் இருந்து விட்டு வருவோம்’ என்று சொல்வேன் என்றாள்.

‘நல்லது, அப்படியே செய். காலையில் நான் வசந்தியிடம் தொடர்பு கொண்டு தெரிவித்து விடுகிறேன்’ என்றாள் சுமதி.

‘ஆர்த்தி! என் சிநேகிதி ஒருத்தி சிறுவயது முதல் உயர்வான உணர்வுகளோடு இலட்சியமாக வாழ்பவள் அவளைப் பார்த்து வருவோமா?’ என்று மெல்ல ஆர்த்தியின் உள்ள நிலையை அறியும்வண்ணம் பேச்சுக் கொடுத்தாள் சுபா.

‘சில நாட்கள் எங்காவது போக வேண்டும் என்றுதான் தோன்றுகிறது பெரியம்மா. நிச்சயம் உன் சிநேகிதியைப் பார்த்து வருவோம். அவர்களுக்கு என் வயதில் பிள்ளைகள் இருப்பார்-களா?’ என்றாள் ஆர்வத்துடன்.

‘அவள் திருமணமே செய்து கொள்ளவில்லை’ என்றாள் சுபா.

‘ஏன்? ஏதேனும் வாழ்க்கையில் விரக்தியடைந்தவரா’ என்றாள் ஆர்த்தி.

‘அதெல்லாம் ஒன்றுமில்லை, விரக்தி என்பதே தெரியாது அவளுக்கு. குறுகிய எல்லைகளைத் தகர்த்தெறிந்து, பெரிய-தொரு தெய்வீக சக்தியால் வாழ வேண்டும் என்பாள். எனக்கு அதெல்லாம் புரியாது. சாதாரணமானவர்களைப் போலில்லாமல் வித்தியாசமானவள் என்பதுதான் தெரியும்’ என்றாள் சுபா.

‘பெரியம்மா! நீ சொல்வதைக் கேட்டால் எனக்கு அவரை இப்போதேப் பார்க்க ஆவலாயிருக்கிறது. புறப்படு, போவோம்’ என்றாள் ஆர்த்தி.

‘போவோம், போவோம். புறப்படுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு நாளைப் புறப்படுவோம்’ என்றாள் சுபா.

ஆர்த்தி திடீரெனக் கலகலப்பானாள். ஊருக்குப் புறப்பட ஏற்பாடுகள் செய்தாள். புதியவர், பெரியம்மாவின் சிநேகிதி வித்தியாசமானவர் எப்படியிருப்பார் என்று ஓயாத கற்பனை. பெரியம்மா நடுத்தர வயதுடையவர். அவர் சிநேகிதியும் அப்படித்தானிருக்க வேண்டும். திருமணமே செய்து கொள்ளவில்லை. ஆனால் விரக்தி மனப்பான்மையுமில்லை, யாரவர்? எப்படியிருப்பார். போகும் போதும், வரும் போதும் பெரியம்மாவிடம் அவரைப்பற்றி ஏதேனும் கேட்ட வண்ண-மிருந்தாள்.

‘இளம் வயது சிநேகிதம். நீ பிறந்த பிறகு அவளைப்பற்றி நினைக்கவேயில்லை. எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன. நேரில் போனால்தான் தெரியும். ஆனால் சராசரிப் பெண்கள் போன்று இருக்கமாட்டாள் என்பது மட்டும் தெரியும்’ என்று ஒருவாறு சமாளித்தாள்.

தொடரும்...

❁❁❁❁❁

**ஜீவிய மணி**

*கற்றதை மறப்பது சாதனை. கல்லாததை மறப்பது ஆன்மீக சாதனை.*



## சொல்லி சாதிப்பதும், சொல்லாமல் சாதிப்பதும்

கர்மயோகி

சொல்லி சாதிப்பது சிறியது. சொல்லாமல் சாதிப்பது பெரியது. சொல்லி சாதிக்கும்பொழுது சொல்லின் திறமை செயல்படும். சொல்லாமல் சாதிக்கும்பொழுது சொல்லில் புதைந்துள்ள மௌன சக்தி செயல்படும். அதன் சாதனை உலகளவு. சொல்லும்பொழுது செயல்படுவது பேச்சு, அறிவு, விவாதம்.

சொல்லாமலிருந்தால் பேச்சுக்குப் பதில் நினைவும், அறிவுக்குப் பதில் விவேகமும், விவாதத்திற்கு பதில் கருத்தும் செயல்படும். அடுத்த உயர்ந்த கட்டத்தில் நினைவழிந்த லயமும், விவேகமும் உயர்ந்து அறிய முடியாததாகி, விவாதம் அடங்கி வெற்றியாகும்.

- சொல்லியும், சொல்லாமலும் மனிதன் சாதனையை நாடுகிறான்.
- சாதனையை நாடாதவன் யோக சித்தியைத் தேடுகிறான்.
- எதையும் நாடாத, தேடாத மனநிலை கனிந்து ஆத்ம நிலையாகும்.
- அது சமாதி நிலையான லயத்தில் முடியும்.
- லயம் ஆத்மா குருடான நிலை என பகவான் கூறுகிறார்.
- லயத்தில் விழிப்பு, விழிப்பில் சமாதி நிலை - பூரண யோகத்-திற்குரியது.
- இதன் பவர் உலகையும், பிரபஞ்சத்தையும் கடந்தது.
- சாதகனாக முயலும் அன்பனுக்கு இதன் அம்சம் சித்திக்கும்.
- முழுமையான சமர்ப்பணம், இடைவிடாத நினைவு, இதயத்தின் அழைப்பு இந்த அம்சத்தைத் தரும்.
- இந்த அம்சம் பலிக்க, இதன் அடிப்படைத் தத்துவம், விவரம், விளக்கம் அறிந்து ஆழ் மனம் எந்த நேரமும் அதையே இலக்காக நினைத்து அங்கேயே நிலைக்க வேண்டும்.

- அம்முயற்சி சிறிதளவாவது பலனின்றிப் போகாது.
- அதை ஏற்று வளர்ப்பது முறை.
- அது வளர்வதும், வளர்வதின் விளைவும் புறத்தில் செயலாக-வும் அகத்தில் உணர்வாகவும் தெரியும்.
- இதுபோல் கடமையைச் செய்தவருக்குக் கல்லூரி ஆசிரியர் வாழ்வு படிப்படியாக உயர்ந்து, மூன்று முறைகள் கவர்னராகி, ஜனாதிபதிக்கு நியமனம் செய்யும் நிலைக்கு வந்தார்.
- வேறொருவர் இதே மனநிலையில் நேர்மையாகச் செயல்பட்டு ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு பத்து ஆண்டு-களுக்குப் பின் ஜனாதிபதியானார்.
- ஒரு ஏக்கர் சொந்த நிலமில்லாதவர்க்கு இம்மனநிலை இருநூறு ஏக்கர் நிலம் பெற்றுத் தரும்.
- திறமைக்குரியது வாழ்க்கைப் பலன்.
  நேர்மைக்குரியது வாழ்வில் பெரும் பலன்.
  திறமையும், நேர்மையும் இணைந்து மனத்தைக் கடந்தால் யோகப் பலனுண்டு.
- 'பலன்' என்ற அளவில் அதையும் நாடாத மனம் பற்றற்றானை அடையும்.
- மௌனம், அமைதி, சாந்தம், பொறுமை இம்மனநிலைக்கு உறைவிடம்.

★★★

**ஜீவிய மணி**

அடுத்தவருடன் ஐக்கியமானால் மனிதன் விஸ்வமானவனாவான். அடுத்தவருடனும் ஆண்டவனோடும் பெறும் ஐக்கியம் பரமாத்மாவாகும் ஜீவாத்மாவாகும்.



## அன்னை ஸ்ரீ அரவிந்தரின் புரட்சிகரமான சிந்தனைகள்

என். அசோகன்

அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் ஆன்மீகத்தில்தான் புரட்சி-கரமான சிந்தனைகளை வெளியிட்டார்கள் என்றில்லை. சமூகரீதியாகவும் அவர்கள் சிந்தனைகள் புரட்சிகரமானதாக அமைந்தது. அதிலொன்று காதல் திருமணமாகும். காதல் திருமணம் என்பது மேலை நாடுகளில் வெகுநாட்களாகவே பழக்கத்திலிருக்கின்ற ஒன்றாகும். 1950-க்குப் பிறகுதான் இது இந்தியாவிலேயே தலைகாட்டத் தொடங்கியுள்ளது. அதற்கு முன்னர் பெற்றோரே பார்த்துப் பத்துப் பதினைந்து வயதி-லேயே திருமணம் செய்து வைத்துக் கொண்டிருந்தார்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஆண்பிள்ளைகளுக்குப் பள்ளிக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி எல்லாம் வந்து-விட்டதால், இளைஞர்கள் பள்ளி, கல்லூரிகள் முடித்து, வேலை தேடிக் கொள்ளும் வரையிலும் திருமணத்தைத் தள்ளிப்போட வேண்டியதாயிற்று. 1950-க்குப்பின் பெண்களுக்கும் கல்லூரி-யில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கல்லூரிப் படிப்பு, அதன்பின் வேலை என்று பரவ ஆரம்பித்ததால் கல்லூரியில் வைத்து, அலுவலகத்தில் வைத்து, காதல் திருமணங்கள் அரங்கேறின. சென்ற நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில், நிச்சயிக்கப்பட்ட திருமணத்தைப்போலவே காதல் திருமணங்-களும் சகஜமாகி விட்டது.

அன்பர்களாக வருபவர்களுக்குப் பொதுவாக எந்தக் கட்டுப்பாடும் விதிப்பதில்லை என்று பகவான் குறிப்பிட்-டுள்ளார். பிரம்மச்சரியமும் இதிலடங்கும். ஆகவே அன்பர்கள் அவரவர்களுக்கு என்ன கட்டுப்பாடு ஏற்றுக்கொள்ள முடியுமோ அதை அவர்களேதான் முடிவு செய்து கொள்ள வேண்டும்

என்றாகிவிட்டது. அன்னையிடம் வந்த அன்பர்கள் பெரும் பாலானவர்கள் குடும்பஸ்தர்களாகவே இருக்கிறார்கள். அப்படி வருபவர்களில் யாருக்காவது ஆன்மீக ஆர்வம் எழுந்து, அதற்-குண்டான கட்டுப்பாடுகளை மேற்கொண்டார்கள் என்றால், அவர்கள் உயர்ந்த மனிதர்களாகிவிடுகிறார்கள். பகவான் ஆரம்ப காலத்திலேயே ஜாதியும், தீண்டாமையும் நீக்கப்பட வேண்டும் என்று எழுதியிருந்தார். இப்பொழுது காதல் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றவர்கள் இவ்விஷயத்தில் அன்னை மற்றும் பகவானுடைய கருத்துகள் என்னவென்று புரிந்து கொள்வது நல்லது. வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் காதல் திருமணம் செய்து கொள்வதை அவர்கள் முதலில் ஆதரிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அடுத்த பிரச்சனை வெவ்வேறு ஜாதி பழக்கங்கள் ஒத்துப் போவது எப்படி என்று பார்ப்பதுதான். சைவ, அசைவ உணவு என்பது இதில் பிரதானமாக அமைகிறது. கணவராக வரப்-போகிறவர் அசைவம் உண்பவர் என்று முதலிலேயே தெரிந்தால், அதை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லிய பின்பு பேச்சை மாற்றி அதை ஆட்சேபிப்பது சரியில்லை. வாழ்க்கை-யிலேயே பொதுவாக அடுத்தவருடன் பழகும்போது நிறைய இடங்களில் விட்டுக் கொடுத்துப் பழக வேண்டியுள்ளது. ஆகவே திருமணம் என்ற விஷயத்தில் இம்மாதிரி சாப்பாட்டு விஷயங்களில் விட்டுக் கொடுத்தே ஆக வேண்டும். திருமணத்திற்கு முன்பு ஏற்றதை, பின்பு வேண்டாம் என்று மாற்றுவது சரியில்லை. இதைவிட பெரிய பிரச்சனை திருமணத்தில் குறுக்கிடுகிறது. அதுதான் தன் குடும்பம் அந்தஸ்த்தில் உயர்ந்ததா அல்லது அடுத்தவர் குடும்பம் உயர்ந்ததா என்பது. P&P நாவலில் வருகின்ற கதாப்பாத்திரமான டார்சி, இவ்விஷயத்தில் தன் குடும்பப் பெருமையை அளவிற்கதிகமாகப் பாராட்டிக் கொண்டிருந்தான். வருமானம், கலாச்சாரம், அந்தஸ்த்து, அறிவு என்ற எல்லா விஷயங்களிலும் போட்டி எழுவது வழக்கம்.



இப்படித் தன் குடும்பம் உயர்ந்ததா அல்லது அடுத்தவர் குடும்பம் உயர்ந்ததா என்று சதா போட்டியிடும்போது இருவர் சந்தோஷமும் கெட்டுத்தான் போகிறது. கலப்புத் திருமணங்-களிலும் இதே பிரச்சனை வர வாய்ப்புள்ளது. காதல் திருமணம் செய்பவர்கள் இந்தப் பிரச்சனையை எழுப்புவது அறிவிற்குப் பொருத்தமானதாக இல்லை. கலப்புத் திருமணங்களில் ஒருவர் அன்னை அன்பராக இருந்து, மற்றவர் அன்னை அன்பராக இல்லாவிட்டால் குலதெய்வ கோவிலுக்கு வழிபாட்டிற்குச் செல்வது என்ற பேச்சு வரும்போது தகராறாகிவிடும். சடங்கு, சம்பிரதாயம் போன்ற நிகழ்ச்சிகளில் அணிகின்ற உடைகள் விஷயமாகவும் கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆனால் இருவரும் அன்னை பக்தர்களாக இருக்கும்பட்சத்தில் இத்தகைய கருத்து வேறுபாடுகள் எழ வாய்ப்பில்லை.

கலப்புத் திருமணங்களில் சடங்கு முறைகள் பால், பழம் கொடுப்பதிலிருந்து, ஸ்தோத்திரம் சொல்வது, சீர்வரிசை செய்வது, தாலி கோர்ப்பது, சாப்பாட்டிற்கு அழைப்பது என்று எல்லாக் கட்டங்களிலும் வேறுபடலாம். ஆனால் இவைகளைச் சர்ச்சைக்கு ஆளாக்காமல் அன்பர்கள் விடுபடுவது நல்லது. எல்லாத் திருமணங்களிலும் மனநிலை வேறுபாடுகள் வரத்தான் செய்கின்றன. ஆகவே கலப்புத் திருமணங்களிலும் இது தலையெடுக்கிறது. ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் இது தலையெடுக்காது என்று சொல்வதில் அர்த்தமில்லை. எழுகின்ற பிரச்சனைகளில் உண்மையிலேயே ஜாதி சம்பந்தப்பட்டது எது என்று கவனமாக ஆராய வேண்டும். எவ்வளவு கடினமான பிரச்சனையாக இருந்தாலும் அன்னை அன்பர்களுக்கு அவை தீராத பிரச்சனையாக இருக்க முடியாது. அடுத்தவர்கள் கண்ணோட்டத்தை மதித்தல் என்ற அன்னை அணுகுமுறையைக் கொண்டு இத்தகைய பிரச்சனையைச் சமாளித்து விடலாம்.

**பெண்களுக்கும், ஆண்களுக்கு நிகரான சமவுரிமை:** சமத்துவம் என்பது பிரெஞ்சுப் புரட்சி கொள்கைகளில் இரண்டாவது ஆகும்.

முதல் கொள்கையான சுதந்திரமே இன்னமும் முழுமையாக ஏற்கப்படவில்லை. ஒரு கருத்தை பொதுமக்கள் ஏற்கும்பொழுதுதான் அதற்கு வலிமை வருகிறது. அந்நாட்களில் வேதகாலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக இருந்தார்கள். இன்றுகூட கேரளாவில் மருமக்கள் தாயம் என்ற பெண்வழி சொத்துமுறை அமலில் உள்ள இடங்களில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முகமதியர்களைத் தவிர மற்ற எல்லா சமூகத்தினரும் பெண்களுக்கு சமவுரிமை கொடுக்கிறார்கள். அன்னையும், பகவானும் பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது மட்டுமின்றி ஆன்மீகத்திலும் அவர்களுக்கு சமவுரிமை கொடுத்தார்கள். அன்னையிடம் பகவானே சரணடைந்து அன்னையை ஒருபடி மேலே உயர்த்தினார். சுதந்திரமடைவதற்கு சில வருடங்களுக்கு முன்பு அன்னை, ஆசிரமத்தில் பெண்களுக்கு உடற்பயிற்சி செய்வதற்கு உரிமை வழங்கினார். பெண்களும் அந்த உரிமையை ஏற்றுக் கொண்டு தீவிரமாக உடற்பயிற்சி செய்தார்கள். இந்தியாவிலேயே பகவானுடைய ஆசிரமத்தில்தான் பெண்களுக்கு முதன்முதலாக சாதகர்களாகும் சம உரிமை வழங்கப்பட்டது. இந்திய சரித்திரத்தில் பெரிய மகாராணிகளும், பெரிய பெண் அடியார்களும் இருந்துள்ளார்கள். ஆனால் இப்படி அமைவது விதிவிலக்கு. இங்கிலாந்தில் ஒரு பெண்மணி ஒரு ஹாலுக்குள் நுழைந்தால், அங்கு அமர்ந்திருக்கும் ஆண்கள் அனைவரும் எழுந்து நிற்பார்கள். ஆனால் அந்த நாட்டில்தான் கல்யாணமான பெண் கணவனுடைய ஒரு உடைமையாகக் கருதப்பட்டாள். ஆங்கிலேயர்களின் பழக்கம் என்னவென்றால் ஒரு பெண்ணை மணக்க விரும்பும் இளைஞன் அவள்முன் மண்டியிட்டு, தன்னை மணம் புரிந்து தன்னை கௌரவிப்பாளா என்று வாய்விட்டுக் கேட்க வேண்டும். கலாச்சாரம் அப்படி இருந்தாலும் பெண்களுக்குப் பொருளாதார ஆதரவு தேவைப்பட்டதால் அவர்கள் நிலைமை பலஹீனமாகவே இருந்தது. ஒரு பெண்ணிற்குத் திருமணம் ஆகும்போது



அவளுடைய சொத்து அவளை மணம் புரியும் கணவனுக்குப் போய்ச் சேரும். சொத்தைப் பெறுவதற்குக்கூட உரிமை இல்லாமல் பெண்கள் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் இருந்தார்கள். ஆகவே நடைமுறையில் சமூகத்தில் பெண்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. திருவள்ளுவர் சாப்பிடும் சமயத்தில் தன்னுடைய மனைவி வாசுகியைத் தண்ணீரையும், ஊசியையும் தன்னுடைய பக்கத்தில் வைக்கச் சொல்வாராம். பல வருடங்களாக இப்படிச் செய்தாலும், ஒரு தடவைக்கூட ஏன் என்னை ஊசியும், தண்ணீரும் வைக்கச் சொல்லுகிறீர்கள் என்று வாசுகி அம்மையார் திருவள்ளுவரைக் கேட்டதேயில்லை. கடைசியாக ஒருநாள் அவரே அந்தப் பேச்சை எடுத்து, உன்னை ஊசியும், தண்ணீரும் வைக்கச் சொல்லுவேன். நீயும் ஏன் எதற்கு என்று கேட்காமல் வைத்துக் கொண்டிருந்தாய். நீ உணவு பரிமாறுகின்றபோது சாதம் சிந்தினால், அதை ஊசியால் எடுத்துத் தண்ணீரில் கழுவி என் தட்டில் போடுவதற்காக இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தேன். ஆனால் ஒருநாள்கூட நீ சிந்தியதில்லை. அந்தளவிற்குக் கவனமாகப் பரிமாறினாய் என்று புகழ்ந்து பேசினார். பகவான் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க முன்வந்தாலும், இந்திய சமூகம் அவர் இஷ்டப்பட்டதுபோல் பெண்களை நடத்தவில்லை, 1920, 30-இல் முதல் மனைவி இருக்கும் போதே இரண்டாம் மற்றும் மூன்றாம் மனைவியரை ஆண்கள் மணந்து கொண்டார்கள். ஆனால் அதே சமயத்தில் குழந்தைப் பருவத்திலேயே ஒரு பெண் திருமணமாகி ஏழு வயதிலேயே விதவையானாலும் அவளை ஒரு அபசகுனமாகக் கருதியதும் உண்டு.

ஆன்மீக அளவில் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என்றுதான் பகவான் கூறியுள்ளார். பெண்களுக்கு ஆசிரமத்தில் உறுப்பினராகும் தகுதியை அளித்துள்ளார். மேலும் படிக்கும் உரிமையையும் வழங்கியுள்ளார். ஆசிரமத்தைப் பொறுத்தவரை ஜாதி என்பது என்றுமே பிரச்சனையாக இல்லை. ஏனென்றால்

எல்லா ஜாதி மக்களும் ஆசிரமத்தில் இடம் பெற்றிருந்தார்கள். அதுபோக வெளிநாட்டிலிருந்தும் உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். சில ஆசிரமத் துறைகளுக்கே பெண்கள் தலைமை தாங்கியதுமுண்டு. சில குறிப்பிட்ட விஷயங்களில் ஆண்களை விட பெண்கள் அதிகத் திறமையை வெளிப்படுத்தியதும் உண்டு. பகவான் தன்னுடைய சாவித்திரி காவியத்தில் கதாநாயகி சாவித்திரியை எமனையே கரைக்குமளவிற்கு ஆன்மீக பலம் வாய்ந்த கதாபாத்திரமாக உருவாக்கியுள்ளார். சாவித்திரி வாங்கித் தரும் வரங்களைப் பெற்று அனுபவிக்கும் இடத்தில்தான் சத்தியவானே இருக்கிறார். அன்னையை இந்திராகாந்தி அம்மையார் 1970-இல் சந்தித்தபொழுது அவர்கள் அன்னைக்கு மிகவும் மனோதிடம் உள்ள பெண்மணியாகத்தான் காட்சியளித்தார். தேர்தலில் மெஜாரிட்டி கிடைக்க வேண்டுமென்று அன்னையிடம் கேட்டபோது அன்னை பலமாகத் தலையசைத்து நல்ல மெஜாரிட்டி கிடைக்கும்படி செய்தார். வங்கதேச விஷயமாக பாகிஸ்தானுடன் போர் மூண்டபொழுது அன்னை, இந்திரா அவர்களுக்குப் போர் நிதிக்காக தங்கத்தையே அனுப்பினார். சமூகத்தின் பலஹீனமானவர்களை ஆதரிப்பது என்பது சாதாரணமான விஷயமில்லை. நாம் யாரை ஆதரிக்கிறோமோ அவர்களே நமக்கு எதிரியாக மாறினாலும் ஆச்சரியமில்லை. இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் பெண்களை ஆண்களுக்குச் சரிநிகர் சமானம் என்று சொல்வதோ, அவர்களை ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்வதோ, கால்சட்டை அணிந்து உடற்பயிற்சி செய்ய அனுமதிப்பதோ, என்றிவையெல்லாம் மிகவும் புரட்சிகரமான விஷயங்கள். 1904-ஆம் ஆண்டிலேயே இந்தியா உறங்கிக் கொண்டிருந்தபோதே நாடு பூரண சுதந்திரம் அடைய வேண்டும் என்று பகவான் கருத்துத் தெரிவித்தார். இந்தப் புரட்சிகரமான கருத்தை காங்கிரஸ் கட்சி 1929-ஆம் ஆண்டில்தான் ஏற்றுக் கொண்டது. இம்மாதிரியே பாகிஸ்தான் இந்தியாவை விட்டுப் பிரிந்து போனபோது, அடுத்த இருபத்தைந்து



ஆண்டில் பாகிஸ்தான் இரண்டாக உடையும் என்று தீர்க்க தரிசனமாக ஒரு எச்சரிக்கை விடுத்தார்.

**வாழ்க்கையை கைவிடாமல் இருத்தல்**

வன்முறையான புரட்சி நிகழ்த்தாமல் ஒரு சமூகத்தை மாற்ற முடியும் என்றால் அப்படிப்பட்ட மாற்றம் கொண்டு வரக்கூடிய கருத்தை நாம் புரட்சிகரமான கருத்து என்கிறோம். உதாரணமாக கலப்புத் திருமணம் இருநூறு வருடங்களுக்கு முன்பே இந்தியாவில் வந்திருந்தது என்றால் அப்பொழுதே இந்திய சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றி இருக்கும். தற்பொழுது வன்முறையின்றி சமூகம் மாறிக் கொண்டுதான் இருக்கிறது. குடும்பத்தைத் துறந்து காட்டில்போய் தவம் செய்வது என்பது நம் நாட்டில் வழக்கமான காரியமாகி விட்டது. ஸ்ரீ அரவிந்தர் இதே கருத்தை வேறுவகையாகச் சொல்கிறார். அதாவது குடும்பத்தைத் துறக்காமல் குடும்பத்திற்குள்ளேயே இருந்து கொண்டு யோகத்தைச் செய்யலாம் என்கிறார். இது மிகவும் புரட்சிகரமாகத்தான் இருக்கிறது. இதன் புரட்சிகர அம்சங்கள் என்ன என்று பார்ப்போம். திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாக இருப்பது கடினமான காரியமாகும். அதேசமயத்தில் எல்லா வாழ்க்கையும் யோகம்தான் என்று சொல்லியதுமுண்டு. வாழ்க்கையே யோகம் என்றால் நாம் பற்றுதல் இல்லாமல் வாழ்க்கையை வாழ வேண்டும் என்று அர்த்தமாகிறது. 1960-இல் ஒரு இந்திய அரசாங்க அதிகாரி அமெரிக்காவிற்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். அந்த காலத்தில் அமெரிக்காவிற்கு அப்படி செல்வது மிகவும் விசேஷமாகக் கருதப்பட்டது. அங்கு, இந்தியர் என்பதால் அவருக்கு ஹோட்டலில் ரூம் கிடைப்பது சிரமமாக இருந்தது. அதுபோக மனைவி மற்றும் பிள்ளைகளைப் பிரிந்து அவரால் இருக்க முடியவில்லை. ஒரே வாரத்தில் இந்தியாவிற்குத் திரும்பி வந்துவிட்டார். ஒரு அமெரிக்க ஸ்காலர்ஷிப்பிற்கு 1200 பேர் போட்டியிட்டபொழுது அதில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வழியில் அமெரிக்கா சென்றவர்

அங்கிருந்து கொண்டே தன்னுடைய நண்பர் ஒருவருக்குத் தான் ஒரு ஸ்காலர்ஷிப் ஏற்பாடு செய்தார். நண்பர் அமெரிக்கா வந்திறங்கியவுடன் குடும்பத்தைப் பிரிந்து வந்த ஏக்க உணர்வு அதிகமாகி வந்த வேகத்திலேயே ஊர் திரும்பினார். நம் வீட்டில் இருக்கும் பொழுது நாம் மற்றவர்களுடன் உணர்வில் ஐக்கியமாகியிருக்கிறோம். அந்தப் பற்றுதலை விடுவதுதான் யோக முயற்சி.

வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள் ஏராளமாக பணத்தையும், அதிகாரத்தையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அப்படி அவர்கள் சேமித்த பணமும், அதிகாரமும் அவர்களை ஆட்டிப்படைக்கிறது. ஆன்மீக கட்டுப்பாடுகள் இப்படிப் பணபோதை, அதிகார போதையில் மாட்டிக் கொள்ளாமல் இருக்கச் சொல்கிறது. கட்டுப்பாடு தீவிரமானால் பணத்தையே தொடக் கூடாது என்றும் சொல்கிறார்கள். ராமகிருஷ்ண பரமஹம்சருக்குத் தங்கக் காசை கண்டாலே உடல் கூசும் அளவிற்கு ஆகிவிட்டது. பகவான் இப்படியெல்லாம் நம்மை இருக்கச் சொல்லவில்லை. சத்திய ஜீவிய ராஜ்ஜியத்திற்கு அடிப்படை செல்வம் என்பதால் பகவான் நம்மை நிறையவே பணம் சம்பாதிக்கத்தான் சொல்கிறார். ஆனால் சம்பாதித்த பணத்தின்மேல் பற்றுவைக்காமல் அந்தப் பணத்தை அன்னை-யின் திருவடிகளில் சமர்பிக்கச் சொல்கிறார். பணம், அதிகாரம், குடும்பம் என்று இவை எதற்குமே பகவான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் இவற்றின்மேல் பற்று வைக்கக் கூடாது என்ற புரட்சிகரமான கருத்தைத்தான் அவர் தெரிவிக்கிறார். அந்தப் பற்று வராமல் விடுபட வேண்டும் என்கிறார். வெளிநாடுகளில் நெடுங்காலமாக வசிப்பவர்கள் கடைசிக் காலத்தில் தாய்நாடு வர விரும்புவதுண்டு. தான் பிறந்த மண்ணின்மேல் தன் உடம்பு கொண்ட பாசத்தை அது காட்டுகிறது. ஒரு அன்பான தகப்பனார் தன்னுடைய ஒரு மகனையும், மகளையும் டாக்டருக்குப் படிக்க வைத்தார். அவருடைய மகன் மெடிக்கலில் மேற்படிப்பு படித்து



வாழ்க்கையில் நன்றாக செட்டிலாகி விட்டான். தகப்பனார் தன்னுடைய விதவை அத்தையை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தன் அத்தை பிள்ளையை இஞ்சினீயரிங் படிக்க வைத்தார். தன் மூத்தமகனை இவ்வளவு செலவு செய்து படிக்க வைத்த பின்பு அந்தப் பிள்ளை தன்னுடைய சகோதரர்களின் படிப்புக்குப் பொறுப்பேற்கவில்லை என்று தெரிந்தபோது அவர் மனம் உடைந்து போனார். அவருடைய மற்ற பிள்ளைகளில் ஒருவன் தகப்பனாருக்கு எதிரியாக மாறினான். கல்லூரியில் படிக்க மறுத்தான். வாழ்க்கையை பாழாக்கிக் கொண்டான். குடும்பமே திவாலாகிப் போனது. நாற்பது வருடமாக மரியாதையாக இருந்த ஊரில் தொடர்ந்து இருக்க முடியாமல் வெளியேற நேரிட்டது. தகப்பனார் தற்கொலை செய்ய முடிவு செய்து கடலில் மூழ்கி இறந்து போனார். ஒரு வாரம் கழித்து அவருடைய மூத்தமகன் டாக்டராக வேலை செய்யும் அதே மருத்துவமனைக்குத் தகப்பனாருடைய உடல் வந்தது. விலகிப்போன மகனைத்தேடி அவர் உடல் வந்தது. தகப்பனாருக்குப் பிள்ளைமேல் இருந்த அதீத பாசத்தை இது காட்டுகிறது. இத்தகைய கெட்டியான பாசத்தை விட்டுவிட வேண்டும் என்றுதான் பகவான் சொல்கிறார்.

இப்போது **Rules of Psychic Education** என்ற தலைப்பில் அன்னை கூறியுள்ள புரட்சிகரமான கருத்துகளுக்கு வருவோம்.

***1. அறிவை நம்பாமல் ஆன்மாவை நம்பு:*** வாழ்க்கையில் அறிவு சாத்தியமில்லை என்று சொன்ன பல விஷயங்கள் உண்மையில் சாத்தியமாகி இருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்திடமிருந்து, இந்தியா சுதந்திரம் பெற முடியாது என்று பெரும்பாலான இந்தியர்கள் திடமாக நம்பினார்கள். ஆனால் காந்திஜி கிடைக்காது என்ற சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி இங்கிலாந்தைத் தாக்கியபோது சரணடைவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று உலகமே நினைத்தது. ஆனால் ஹிட்லரின் தாக்குதலை முறியடிக்கலாம் என்று இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் திடமாக

நம்பினார். அந்த நம்பிக்கை அறிவிற்குப் பொருத்தமாக இல்லை. இருந்தாலும், அந்த நம்பிக்கை வென்றது. 1929-ஆம் ஆண்டு உலகப் பொருளாதாரம், அமெரிக்க ஸ்டாக் மார்க்கெட் சரிந்துவிட்டபோது வங்கிகள் எல்லாம் திவாலாகின்றன என்று பொதுமக்கள் பயந்து தங்கள் பணத்தை எல்லாம் எடுக்க ஆரம்பித்தனர். அப்போது அமெரிக்க அதிபர் **FDR** அவர்கள் வங்கிகள் நன்றாகத்தான் உள்ளன. மக்களாகிய நீங்கள்தான் பீதியில் மூழ்கியிருக்கின்றீர்கள். இப்படிப் போட்ட பணத்தை எல்லாம் எடுத்தால் உண்மையில் வங்கிகள் எல்லாம் திவாலாகிவிடும், ஆகவே எடுத்த பணத்தை மீண்டும் அதே வங்கியில் போடுங்கள், பீதியிலிருந்து விடுபடுங்கள் என்று அறிவுறுத்தினார். அவருடைய அறிவுரை அறிவிற்குப் பொருத்தமானதாகப் பலபேருக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அவர் சொன்னதற்கு மக்கள் கட்டுப்பட்டார்கள். ஆகவே எடுத்த பணத்தை மீண்டும் அதே வங்கியில் போட்டார்கள். அவர் சொன்னது போலவே நிலைமை நார்மலுக்கு வந்தது.

நாம் இம்மாதிரி நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது தன்னால் முடியாது என்று அறிவு நினைக்கும்பொழுது அறிவைவிட உயர்ந்த சக்திகளுக்கு முடியும் என்று நமக்குப் புரிய வேண்டும். மாதம் லட்ச ரூபாய் சம்பாதிக்கலாம் என்று அப்பா அவர்கள் சொல்லுகின்றபோது நமக்கு நம்புவதற்கு கஷ்டமாக உள்ளது. ஆனால் நம் ஆன்மாவிற்கு இந்தச் சக்தி உண்டு என்று நம்பினால், இப்படி முடியாது என்று நினைப்பதும் சாத்தியமாகிவிடும். 1990-ஆம் ஆண்டு அன்னை பக்தராக இருந்த ஒரு இளம் வாலிபர் சில ஆயிரங்கள்தான் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அதனால் அவர் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தபோது அவருக்கு அமெரிக்காவில் ஐ.டி. துறையில் வேலை கிடைத்து, இப்போது இலட்ச ரூபாய் சுலபமாக சம்பாதிக்கிறார். ஒரு விமான விபத்தில் படுகாயமடைந்த ஒருவரால் நடக்கவோ, பேசவோ, சாப்பிடவோ கூட முடியவில்லை. அவரைக் கவனித்த டாக்டர்கள் அவர் பிழைப்பது அரிதிலும் அரிது என்று



சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் அவர் தன்னுடைய நம்பிக்கையை இழக்கவில்லை. ஒரே வருடத்தில் இந்த ஆஸ்பத்திரியிலிருந்து எழுந்து வெளியேறுகிறேன் என்று சபதம் பூண்டார். அவர் சொன்னமாதிரியே செய்தும் காட்டினார். மருத்துவ விஞ்ஞானம் அவரால் நடக்கவும் முடியாது என்று சொன்னது. ஆண்டவனின் கிருபையால் தன்னை நடக்க வைக்க முடியும் என்று நம்பினார். ஆண்டவனின் கிருபையில் அவர் வைத்த நம்பிக்கைதான் ஜெயித்ததே தவிர மருத்துவ விஞ்ஞானம் ஜெயிக்கவில்லை. தாங்க முடியாத கடன்பாரத்தில் மூழ்கியிருக்கும் அன்பர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்தால்கூட இந்தக் கடனை அடைக்க முடியாது என்று நம்புவதுண்டு. ஆனால் இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத இடத்திலிருந்து பெரிய வருமானம் வந்து, மலைபோலிருந்த கடன் அப்படியே கரைவதுமுண்டு. இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டும்? **Finite**-ஆன நம்முடைய பார்வைக்கு நமக்குத் தெரிந்த வழிகள் எல்லாம் அடைத்து விட்டதுபோல தோன்றுகிறது. ஆனால் அருளின் அகன்ற பார்வைக்கு, நமக்குத் தெரியாத இன்னும் பலவழிகள் தெரிகிறது. அப்படி நமக்குத் தெரியாத ஒரு வழியின் மூலம் நமக்குப் பெரிய வருமானம் கிடைத்து, நம்முடைய கடன் பிரச்சனை தீரும்போது, இதுவும் சாத்தியமா என்று ஆச்சரியத்தில் மூழ்குகிறோம்.

**2. வேலையைச் செய், சௌகரியத்தை நாடாதே:** வழக்கமாக நம்முடைய சௌகரியங்கள் பாதிக்காத வகையில்தான் நாம் நம் வேலையைத் தேடுவோம். ஆனால் பெரிய காரியங்களை நாம் இம்மாதிரி செய்ய முடியாது. எந்த ஒரு பெரிய வேலையைத் தொடங்கினாலும் நாம் நம் சௌகரியங்களைத் துறந்து அந்த வேலையை முடிப்பதில் தீவிரம் காட்ட வேண்டும். ஒரு வியாபாரத்தை தொடங்குவதற்காக ஒருவர் கட்டடம் கட்டுகிறார் என்றால் நேரம், காலம் பாராமல் அவர் அந்த வேலையை முடிக்கத் தயாராக வேண்டும். தேவைப்பட்டால் அந்த வேலை

நடக்கும் இடத்திலேயே தூங்கவும் முன்வரவேண்டும். ஏ. சி. வசதிகள் எல்லாம் வேண்டும் என்று கேட்க முடியாது. கட்டடத்திற்குத் தேவையான கட்டுமானப் பொருட்களை வாங்குவதற்குத் தேவைப்பட்டால் நெடுந்தூரம் பயணம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இம்மாதிரி நேரங்களில் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு வேண்டும் என்றெல்லாம் கேட்க முடியாது. காடாக இருக்கும் நிலத்தை விளைநிலமாக மாற்ற ஒரு விவசாயி முன்வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இது மிகவும் கடினமான வேலையாகும். இந்த வேலையைச் செய்யும்போது அவர் எல்லா சௌகரியங்களையும் மறந்து விடவேண்டும். தேவைப்பட்டால் ஒரு கொட்டகையில்கூட படுக்க வேண்டும். நன்றாக சமைத்த வீட்டுச் சாப்பாட்டை மறக்க வேண்டும். நவீன குளியலறை எல்லாம் எதிர்பார்க்கக் கூடாது. திறந்த வெளியில் தண்ணீர் கொட்டுகின்ற போர்களில் கூட குளிக்கத் தயாராக இருக்க வேண்டும். காட்டைத் திருத்தி விளைநிலமாக மாற்றிய பிறகுதான் இந்தமாதிரியான சௌகரியங்களுக்கு அவர் ஆசைப்பட வேண்டும். எழுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த அரசியல்வாதிகள் தேர்தல் வரும்போது, பிரச்சாரத்திற்காக நீண்ட தூரப்பயணம் மேற்கொள்வதை நாம் பார்க்கிறோம். ஒரு நாளைக்கு நான்கைந்து இடங்களில் மீட்டிங் போடுகிறார்கள். இதற்காகக் காலை நான்கு மணிக்கே எழுந்துவிட வேண்டியுள்ளது. கடைசி மீட்டிங் முடிந்து இரவு ஓய்வு எடுக்கும்போது பதினொரு மணியாகி விடுகிறது. இதற்கெல்லாம் அவர் தயாராக இல்லை என்றால், அவரால் அந்தத் தேர்தல் பிரச்சாரத்தை வெற்றிகரமாக நிகழ்த்த முடியாது. கால்சென்டரில் வேலை செய்பவர்களெல்லாம் நைட் ஷிப்ட்டிற்கு வேலைக்குப் போயாக வேண்டும். வெளிநாட்டு கஸ்டமர்கள்தான் போன் செய்வார்கள் என்பதால் நைட் ஷிப்ட் செய்ய வேண்டியுள்ளது. பெண்களுக்கு பாதுகாப்பு முக்கியம். நைட் ஷிப்ட்டிற்குப் போக பெண்கள் யோசிப்பார்கள். இருந்தாலும் அப்படிப்போனால்தான் சம்பளம்



கிடைக்கும் என்ற நிலையில் அவர்கள் தங்களுடைய பாதுகாப்பையும் தியாகம் செய்து விட்டுத்தான் வேலை செய்கிறார்கள். ஐ. டி. கம்பெனி வேலையில் லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்றால் அது நமக்குப் பெரியதாகத் தெரிகிறது. ஆனால் இரவெல்லாம் கண் விழித்து அமெரிக்காவில் உள்ளவர்களுடன் **transactions** செய்துதான் அத்தகைய பெரிய வருமானத்தை அவர்கள் பார்க்கிறார்கள். வருமானம் லட்ச ரூபாயாக இருந்தாலும் எனக்கு நைட் ஷிப்ட் வேண்டாம் என்று சொல்பவர்களுக்கு இந்த லட்ச ரூபாய் இல்லை என்று நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

**௩. வேலையில் Perfection-ஐ உயர்த்திக் கொண்டே போகவேண்டும்:**
எந்த வேலையிலும் முழு **Perfection**-ஐ அடைவது எப்பொழுதும் சிரமமாகும். உதாரணத்திற்குச் சுத்தத்தை எடுத்துக்கொள்வோம். நூறு சதவிகிதம் வீட்டை சுத்தமாக வைத்திருக்கிறோம் என்று எவரும் சொல்ல முடியாது. சுத்தப்படுத்த வேண்டிய இடங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. நேற்று நாம் தரையைப் பெருக்கிக் கழுவினோம் என்றால், இன்று மின்விசிறிகள், மின்விளக்குகள், அலமாரிகள், மற்றும் புத்தக அலமாரிகள் ஆகியவற்றைத் துடைத்துச் சுத்தப்படுத்தலாம். மறுநாள் குளிர் சாதனம், மிக்ஸி, கிரைண்டர், ஹீட்டர் போன்ற சாதனங்களைச் சுத்தப்படுத்தலாம். இந்நிலையில் வீட்டை யாரேனும் பரிசோதனை செய்யச் சொல்லி அவர்களை நம் சுத்தத்திற்கு மதிப்பீடு செய்யச் சொன்னால் அவர்கள் கண்களுக்கு நம் கண்களுக்குப்படாத இடங்கள் எல்லாம் படும். இந்த இடத்தைச் சுத்தம் செய்யாமல விட்டுவிட்டீர்கள். இது உங்கள் கண்களில் படவேயில்லை என நமக்கு நிறைய சுட்டிக் காட்டுவார்கள். தலைவாரும் சீப்பு சுத்தமாக இல்லை, கம்ப்யூட்டர் கீ போர்டு சுத்தமாக இல்லை, கட்டிலுக்குக் கீழே சிலந்தி வலை உள்ளது என்றெல்லாம் சொல்லி நம்மை அதிர்ச்சிக்கு ஆளாக்குவார்கள் . ஆகவே சுத்தம் என்ற விஷயத்தில் எப்போதும் அதை மேம்படுத்திக் கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். சுத்தத்திற்கு

இது எவ்வளவு பொருந்துமோ அதேயளவிற்கு நாம் செய்கின்ற மற்ற வேலைகளுக்கும் அது பொருந்தும். உதாரணமாக பெயிண்டர்கள், எலக்ட்ரீஷியன்கள், பிளம்பர், தச்சு வேலை செய்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் செய்கின்ற வேலைகளில் கூட முன்னேற்றத்திற்கு நிறைய வாய்ப்புள்ளது. பெயிண்டரை எடுத்துக் கொண்டால் மார்க்கெட்டில் என்னென்ன புதுவிதமான பெயிண்ட் வந்துள்ளது என்று விசாரித்துக் கொண்டேயிருக்கலாம். அம்மாதிரியே எலெக்ட்ரீஷியன்களை எடுத்துக் கொண்டால் புதிதுபுதிதாக என்ன பவர் சேவிங் சாதனங்கள் எல்லாம் மார்க்கெட்டில் வந்துள்ளது என்று பார்க்கலாம். அம்மாதிரியே பிளம்பரை எடுத்துக் கொண்டால் என்ன புதுப்புது ஜாயிண்ட் வந்துள்ளது என்று பார்க்கலாம். பெயிண்டர் பழைய பெயிண்ட் ஒரு லிட்டருக்கு ஐநூறு சதுரடி பரப்பளவில் அடிக்கலாம் என்றால், புதிய பெயிண்ட்டில் ஐநூற்று ஐம்பது சதுரடி பரப்பளவில் அடிக்கலாம் என்றால், கஸ்டமர்கள் அவர்களுடைய அறிவு நுணுக்கத்தினைப் பாராட்டி அவரை அதிகமாக வேலைக்கு அழைப்பார்கள். அம்மாதிரியே எலெக்ட்ரீஷியனும் பதினைந்து வாட் பல்ப் கொடுக்கும் வெளிச்சத்தைப் பத்து வாட் பல்ப்பும் கொடுக்கக்கூடிய புது மாடல்கள் எல்லாம் வந்துள்ளது என்று கஸ்டமர்களிடம் தெரிவிக்கிறார் என்றால் கஸ்டமர்கள் அவருக்குத்தான் விரும்பி வேலைகளைக் கொடுப்பார்கள். அம்மாதிரியே பிளம்பரும் தண்ணீர் கசிவைத் தடுப்பதற்கு எந்தவிதமான புதுப்புதுப் பொருட்கள் எல்லாம் மார்க்கெட்டில் வந்துள்ளன என்று விவரம் தெரிந்து வைத்துள்ளார்கள் என்றால் அத்தகைய பிளம்பர் கஸ்டமரிடம் பாப்புலர் ஆகிவிடுவார். நம் நாட்டில் ஆங்கிலத்தில் பேசுவோருக்கு நல்ல மரியாதை உண்டு. அதுவும் ஒருவர் பிழையில்லாமல் ஆங்கிலத்தில் எழுதுகிறார் என்றால் அவருக்கு அமோக வரவேற்பு கிடைக்கிறது. தினமும் ஒரு புது ஆங்கில வார்த்தையைக் கற்றுக் கொள்ள முயற்சி எடுக்கலாம். தான் ஏற்கனவே எழுதிய ஒரு கட்டுரையை மேலும் சுருக்கமாகத்



தெளிவாக எழுத முயற்சி எடுக்கலாம். வங்கிகளில் ஒரு புது ப்ராஜெக்டிற்குக் கடன் கொடுக்க சுலபமாக ஒத்துக்கொள்ள மாட்டார்கள். எல்லாவிதமான கேள்விகளும் கேட்பார்கள். அந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்ல கஸ்டமர்கள் அலுத்துக் கொள்வார்கள். ஆனால், அழகாக ப்ராஜெக்ட்பற்றி எழுதத் தெரிந்தவர்கள் இந்தப் பிரச்சனையைத் தவிர்க்கலாம். அதாவது இந்த ப்ராஜெக்டின் நோக்கம் என்ன? இதற்குத் தேவைப்படும் மூலதனம் என்ன? உற்பத்தியாகும் பொருளுக்கு என்ன தேவை இருக்கிறது? ஒரு வருடத்திற்கு எந்த அளவு இந்தப் பொருளை விற்கலாம்? நம்பிக் கொடுக்கின்ற கடனை எத்தனை வருடத்திற்குள் திருப்பி அடைக்கலாம் என்றெல்லாம் வங்கியின் கண்ணோட்டத்திலிருந்து என்னென்ன கேள்விகள் எல்லாம் கேட்பார்களோ அந்தக் கேள்விகளை எல்லாம் ப்ராஜெக்டை தொடங்குபவர் தன்னையே கேட்டுக் கொண்டு அழகான ஆங்கிலத்தில் பிழையில்லாமல் எழுதி, வங்கி அதிகாரியிடம் வழங்கினால் அவர்கள் லாபநட்ட கணக்குகளைப் பார்ப்பதோடு மட்டுமின்றி எழுதியவரின் ஆங்கிலத் திறனைப் பாராட்டியும் கடனை வழங்குவதுண்டு.

**4. அடுத்தவர்களைத் திருத்த முடியவில்லை என்றால், பேசாமல் இருக்க வேண்டும். குறை சொல்லாதே:** அடுத்தவர்களைக் குறைசொல்வது என்பது நிறைய பேர்களுக்குப் பிடித்த விஷயமாக இருக்கிறது. இது அன்னைக்குச் சுத்தமாகப் பிடிக்காத ஒன்று. அடுத்தவர்களைத் திருத்த முடியும் என்றால் நாம் திருத்தலாம். ஆனால் அது முடியாத பட்சத்தில் நாம் சும்மா இருப்பது நலம் என்று சொல்கிறார். அப்படிக் குறை சொல்லாமல் நாம் ஏன் சும்மா இருக்க வேண்டும் என்று அன்னை விரும்புகிறார் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். மற்றவர்களைக் குறை சொல்லாமல் நாம் சும்மா இருக்கும்போது அவர்களைத் திருத்தக் கூடிய மனோபலம் நமக்குள் தாமாக சேகரமாகிறது. அதாவது அடுத்தவரால் வரும் சிரமங்களை நாம் குறை சொல்லாமல் பொறுத்துக் கொள்ளும் பொழுது அந்தச் சகிப்புத்

தன்மை நமக்குள் சாதிக்கும் திறனாக மாறுகிறது. அது நாளடைவில் படிப்படியாக வளர்ந்து, நம்முடைய செயலாற்றலை உயர்த்துகிறது. இப்படி அந்தச் சாதிக்கும் திறனை வளர விடாமல் இடையிடையே குறை சொல்லி திருப்திபடும்போது உள்ளே சேகரமாகின்ற மனோபலம் விரயமாகின்றது. **P&P** கதையில் திருமதி. பென்னட்டிடம் இதை நாம் காணலாம். முதலில் திரு. பென்னட் சரியில்லை என்று குறை கூறினார். அடுத்ததாக டார்சி சரியில்லை என்று ஆரம்பித்தார். மூன்றாவதாக லிஸிக்குப் போனார். இறுதியாக சார்லெட்டின் பெற்றோர்களைக் கேலி செய்தார். இவர் குறை சொல்லிக் கொண்டிருக்கும் வரையிலும் இவரால் எதுவுமே சாதிக்கவே முடியவில்லை. அதேபோல் டார்சியின் செயல்பாட்டையும் கவனித்தால் பென்னட் குடும்பத்தைக் குறை சொல்லும்வரை அவனால் எதையும் சாதிக்கவே முடியவில்லை. லிஸியிடம் திட்டு வாங்கிய பிறகு இனி யாரையும் குறை சொல்லப் போவதில்லை, லிடியா வீட்டைவிட்டு ஓடியதற்குத் தான் விக்கமைப் பற்றிய உண்மைகளை மறைத்ததுதான் காரணம் என்று உணர்ந்து டார்சி மௌனமானபின்தான், அவனால் விக்கம் மற்றும் லிடியா இருக்கும் இடத்தையும் கண்டுபிடிக்க முடிகிறது. அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்து அதன் வழியே லிஸியின் மனதைமாற்றி அவளையும் திருமணம் செய்து கொள்ள முடிகிறது.

***5. உள்மனத்தின் பிரதிபலிப்பே வெளி சூழ்நிலை:*** அன்னையின் ஆன்மீகக் கருத்துகளில் இது மிகவும் முக்கியமானதாகும். ஆகவே இதை நமக்கு ஏற்றுக்கொள்ள மனம் வராவிட்டாலும் அன்னை சொல்லி இருக்கின்றார், அதனால் அது உண்மையாக இருக்கும் என்று ஏற்றுக் கொள்ளலாம். உதாரணமாக சென்ற வருடம் தமிழ் நாட்டில் சரியாக மழை பொழியவில்லை. கடுமையான மின்பற்றாக்குறையும் நிலவியது. இது எதைக் காட்டுகிறது என்று நாம் அறிய வேண்டும். முன்பு நிறைய கிடைத்தது இப்போது அரிபொருளாகிவிட்டது என்றால், நாம்



அந்தப் பொருளைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றுதான் அர்த்தமாகிறது. நாம் எந்த ஒரு பொருளை தவறாகப் பயன்படுத்தினாலும் அது நம்மேல் கோபித்துக் கொண்டு நமக்குக் கிடைக்காமல் போய்விடும். நம்மூரில் ஆறுகளையும், ஏரிகளையும் நாம் அசுத்தப்படுத்துகிறோம். குளங்களிலும், ஆறுகளிலும் ஆகாயத்தாமரை செடிகள் முழுவதும் பரவி தண்ணீர் ஓடுவதற்கே பெரிய இடையூறு செய்கிறது. முனிசிபாலிட்டி குழாய்கள் பல இடங்களில் தண்ணீர் கசிந்து கொண்டு யாருமே அதனைக் கவனிக்காமல் இருப்பதைப் பார்க்கிறோம். பெரும்பாலானோர் முனிசிபாலிட்டி தண்ணீர் வரியைச் சரியாகக் கட்டுவதில்லை. அதன் பலனாகத் தான் வழங்குகின்ற தண்ணீருக்குப் போதுமான கட்டணம் முனிசிபாலிட்டிக்குக் கிடைப்பதில்லை. இவையெல்லாம் இயற்கை கவனிக்கத்தான் செய்கிறது. அப்படிக் கவனிப்பதால் இயற்கையே மழையைக் குறைக்கிறது. தண்ணீர் ஏராளமாகக் கிடைத்தபோது விரயம் செய்த மக்கள் இப்போது பயிர் செய்வதற்கே போதுமான தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். தண்ணீரை விரயம் செய்யும் நம் மக்கள் மின்சார விஷயத்திலும் அதே தவற்றைத்தான் செய்கிறார்கள். கம்பெனிகள் மின்சாரத்தைத் திருடுகின்றன என்று பேப்பரில் அடிக்கடி படிக்கிறோம். பல லட்ச ரூபாயளவிற்குக்கூட இது போகிறது. பல ஊர்களில் மின்கட்டணத்தையே பல வாடிக்கையாளர்கள் கட்டுவதில்லை என்றும் நான் கேள்விப்படுகிறேன். இது மிகவும் மோசமான நிலையை எட்டியதால் அண்மையில் புதுச்சேரி அரசு மின்கட்டணத்தைச் செலுத்தாதவர்களுக்கு மின்தொடர்பைத் துண்டிப்போம் என்று எச்சரிக்கை வழங்கி ஒரு கலெக்ஷன் டிரைவை தொடங்கியது. இதன் விளைவாக நான்கே நாட்களில் மின்வாரியம் நான்கு கோடிக்குமேல் வசூல் செய்தது. நான்கு நாட்களில் நான்கு கோடி வசூலாகியது என்றால், எத்தனை பேர்கள் மின்கட்டணம் கட்டாமல் இருக்கிறார்கள் என்பது புலனாகிறது. மேலும் அரசாங்கம் ஒன்

லைட் சர்வீஸ் என்றொரு இலவச திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் யாருமே ஒரு மின்விளக்குடன் நிறுத்திக் கொள்வதில்லை. அதே சர்வீஸில் கிரைண்டர், மிக்ஸி என்று எல்லாவற்றையும் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். இதுபோல் விவசாயிகளுக்கு பம்ப்செட் இயக்குவதற்கு இலவச மின்சாரம் கிடைப்பதுபற்றி மிக்க மகிழ்ச்சி. இந்த மின்சாரத்திற்கு விவசாயிகள் பணம் கட்டாமல் போனதால் மின்துறையில் கூடுதல் முதலீடு செய்வதற்கோ அல்லது கூடுதல் மின்மாற்றிகள் அமைப்பதற்கோ போதுமான நிதிவசதி இல்லாமல் போகிறது. மின்னுபயோகம் அதிகரிக்கும் அளவிற்கு மின்னுற்பத்தி ஈடுகொடுக்க முடியாமல் போகிறது. இது நாளாவட்டத்தில் பெரிய மின்பற்றாக்குறையாக விஸ்வரூபம் எடுக்கிறது. இதன் காரணமாக அரசாங்கம் பல ஊர்களில் பதினைந்து அல்லது பதினான்கு மணி நேரம் மின்வெட்டை பொதுமக்கள்மேல் திணிக்கிறது. இந்தச் சிரமத்தை எல்லாம் உணர்ந்து பொது மக்கள் தண்ணீர் கட்டணம் மற்றும் மின் கட்டணம் ஆகியவைகளை முறையாகச் செலுத்தி தண்ணீரையோ, மின்சாரத்தையோ விரயமாக்கும் மனப்பான்மையை விட்டொழித்தார்கள் என்றால், இந்த மனமாற்றத்திற்கு வாழ்க்கை நல்ல ரெஸ்பான்ஸ் வழங்குவதைப் பார்க்கலாம். அப்படிச் செய்யாமல் அரசாங்கத்தைக் குறை சொல்வதும், கண்டன ஊர்வலங்கள் நடத்துவதும் அறிவுடைமையாகாது.

**6. உண்பதையும், உறங்குவதையும் சமர்ப்பணம் செய்தல்:** பொதுவாக அன்னை பக்தர்கள், அவர்கள் செய்கின்ற எல்லாச் செயல்களையுமே சமர்ப்பணம் செய்துதான் செய்ய வேண்டும். ஆனால் அதெல்லாம் மிகவும் கடினம் என்பதால் அன்னை குறிப்பாக உண்பது மற்றும், உறங்குவது என்ற இரண்டையும் கண்டிப்பாக சமர்ப்பணம் செய்யச் சொல்லியிருக்கின்றார். இவை இரண்டையும் சமர்ப்பணம் செய்ய முயற்சி செய்தால் எவ்வளவு கடினம் என்பது அப்பொழுதுதான் தெரியும். முதல்



ஓரிரு வாரங்களுக்கு இது கட்டுப்பாட்டிற்கே வராது. மறந்து போய் கொண்டேயிருக்கும். மூன்று வேளைகள் உண்பதையும், ஒரு வேளை உறங்குவதையும் சமர்ப்பணம் செய்வது கடினம் என்றால், அன்னை தன் ஒவ்வொரு செயல்பாட்டையும் சமர்ப்பணம் செய்துதான் செய்தார் என்ற விஷயம் எவ்வளவு மகத்தானது என்பது இப்போது நமக்குப் புரியும். அவர் செய்வதில் கடுகளவுதான் நம்மை செய்யச் சொல்கிறார். அதுவே நமக்குக் கடினமாக இருக்கிறது என்றால், பூரண யோகத்தில் இன்னும் எத்தனை படிகளை நாம் கடக்க வேண்டும் என்பதைச் சற்று நினைத்துப் பார்த்தாலும் மலைப்பாக இருக்கிறது.

★★★

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**Stolen pleasure is sweet.** திருட்டு ஆசைக்கு ருசி அதிகம் என்பது பழமொழி. மறைவாகச் செய்வதால் திறமை அதிகமாகத் தேவை என்பதால் ருசி அதிகமாக இருக்கும். மனித வாழ்வு, தெய்வீக வாழ்வு என மாறும்பொழுது சரி என்பது எல்லாக் கட்டங்களிலும் தப்பாகத் தெரியும். மனம் மாற்றத்திற்கு ஒத்துக் கொள்ளாது. பாரத யுத்தமும், கிருஷ்ண பரமாத்மாவின் யுக்திகளும் இதற்கு உதாரணம். திருவுருமாற்றத்தை நாடினால், நாம் கிருஷ்ண பரமாத்மா செய்தவற்றைச் செய்ய வேண்டியிருக்கும். கிருஷ்ணன் தெய்வம். தெய்வம் எதையும் செய்யலாம். நாம் தெய்வமாக நடக்க முடியாது என்பதால் ‘கிருஷ்ணன் சொன்னதைச் செய், செய்ததைச் செய்யாதே’ என்றனர் பெரியோர். ஸ்ரீ அரவிந்தத்தை ஏற்க வேண்டுமானால் கிருஷ்ணன் செய்தவற்றைச் செய்ய வேண்டும். எப்படிப் போவது? கிருஷ்ணன் எதிரிகளுக்குச் செய்த துரோகம், தவறான யுக்திகளை கிருஷ்ணன் என்ன மனநிலையில் செய்தானோ அம்மனநிலையில் செய்ய வேண்டும் என்பது பொருத்தமான பதில்.

## MALARNDHA JIVIYAM

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No. IV Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Puducherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mr. S. Devanathan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Sakthi Offset Printers,<br>No. 238, Lawspet Main Road,<br>Pakkamudayanpet, Puducherry - 605 008. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Sankar** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Flat No. 11, 2nd Floor, Grace Apartments,<br>177, Pappammal Koil Street,<br>Vaithikuppam, Puducherry - 605 012. |
| 5. | Editor's Name | : | **Mr. N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam Street,<br>Venkata Nagar Extn., Puducherry - 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital | : | **The Mother's Service Society**<br>5, Puduvai Sivam Street,<br>Venkata Nagar Extn.,<br>Puducherry - 605 011. |

I, (P.V. Sankar) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Sd . . . . . . . . . . . . . . . . . .

(P. V. Sankar)

Date: 01-03-2014

Signature of the Publisher.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# மூட நம்பிக்கை

ஒரு காலத்து உண்மையைக் காலம் மாறி அது பொய்யான பின் நம்புவது மூட நம்பிக்கை.

- படித்துப் பட்டம் பெற்றவன் நல்லவன், தவறு செய்ய மாட்டான்.
- சௌகரியமானது இலட்சியம்.
- உலகத்துடன் ஒத்து வாழ்வது உயர்ந்த இலட்சியம்.
- இராகுகாலம் கெட்டது செய்யும் என நம்புவது அன்பருக்கு மூட நம்பிக்கை.
- பணம் எப்படி வந்தாலும் நல்லது.
- பட்டம் பெரியதானால், அறிவு உயர்ந்ததாக இருக்கும்.
- அமெரிக்கா நாகரீகமான நாடு.
- ஐரோப்பியர் வாழ்வு உயர்ந்தது.
- தாயார் தகப்பனார், பிள்ளைகள் நலம் விரும்புகிறவர்.
- உடன் பிறந்தவர் உதவாக்கரையானாலும் உதவுவது இலட்சியம்.
- நண்பன் நட்பைவிட உயர்ந்தவன்.
- காதல் திருமணம் இலட்சியமானது.
- பழையன, பழையன என்பதால் உயர்ந்தது.
- புதியது, புதியது என்பதால் உயர்ந்தது.

# காதல் திருமணம்

இது இலட்சியமானது என நினைப்பவர் 10 ஆண்டுகளுக்கு முன் காதல் திருமணம் செய்த 10 தம்பதிகளைப் பற்றி அறிந்தபின் அதையே கூறுவாரா?

- ஆசைப்பட்டு திருமணம் செய்வதைக் காதல் திருமணம் என்றால் ஆசை இலட்சியமானது எனப் பொருள்.
- காதலில் உண்மையிருந்தால் காதல் இலட்சியமானது.
- அழகான பெண் மீது எழும் காதல் காதலில்லை, அழகின்மீது ஆசை.
- பணக்காரப் பெண்மீது எழுவதைக் காதல் என்பவன் பணத்தை மறுத்து பெண்ணை ஏற்பது சரியாகும்.
- காதல் உயர்ந்த உன்னத இலட்சியம். காதலில் உண்மை இருந்தால் அது முடியும். வாழ்வு சிறப்பைவிட உயர்வாக இருக்கும்.
- பல பெண்களைக் கடந்து ஒரு பெண்ணை நாடியவனுக்குக் காதலில்லை.
- மனத் தூய்மை அரிது, காதல் மனத்தைக் கடந்த ஆத்ம தூய்மைக்குரியது.
- காதல் செய்து திருமணம் செய்ய வேண்டுமென்ற கொள்கை மேல் நாட்டாருக்குண்டு. அது பெரும்பாலும் மூட நம்பிக்கையாக மக்களிடையே உலவுவது.
- விஞ்ஞானி, விஞ்ஞானி என்பதால் அறிவாளி என்பது மூட நம்பிக்கை.
- இன்றைய உலகில் மூட நம்பிக்கை முக்கால்வாசி ஆட்சி செலுத்துகிறது.
- மூட நம்பிக்கை முழுத் திருப்தியைத் தரும் என்பது மனித சுபாவம்.